# சங்கநூற் காட்சிகள்

ராம்நாத் பப்ளிஷிங் ஹவுஸ்
திருச்சிராப்பள்ளி

# சங்கநூற் காட்சிகள்

# சங்கநூற் காட்சிகள்

ஆசிரியர் :

டாக்டர் மா. இராசமாணிக்கம்,
M.A., L.T., M.O.L. (Ph. D.)
விவேகாநந்தர் கல்லூரி, சென்னை.

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

ராம்நாத் பப்ளிஷிங் ஹவுஸ்
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

காப்பிரைட்] [விலை அணா 12

முதற் பதிப்பு—நவம்பர் 1952

Kabeer Printing Works, Madras (2085)

# முகவுரை

புறநானூறு முதலிய சங்க நூல்களை உயர்வகுப்பு மாணவர்க்கு அறிவிக்கவும், அவர்களுக்கு அந்நூல்களிற் பற்றுள்ளம் உண்டாக்கவும், அவற்றிலிருந்து சில செய்திகள் '**காட்சிகள்**' என்னும் பெயரால் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு சிறுநூலிலிருந்து ஒரு செய்தியும் ஒவ்வொரு பெருநூலிலிருந்து பல செய்திகளும் தரப்பட்டுள்ளன. இச் செய்திகள் திருமணம், இல்வாழ்க்கை, அரசியல், போர், ஒழுக்கம், பழக்க வழக்கங்கள் என்னும் பல்வேறு பொருள்களை அடிப்படையாகக் கொண்டவை. இவை மாணவர்க்குச் சங்க இலக்கியத்திற் பற்றினை உண்டாக்கித் தமிழார்வத்தை ஊட்டும் என்று நம்புகிறேன்.

ஆசிரியன்

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நற்றிணைக் காட்சி | ... | 1 |
| | உத்தம மனைவியின் அச்சம் | | |
| 2. | குறுந்தொகைக் காட்சி | ... | 3 |
| | கற்புடை மனைவியின் விருப்பம் | | |
| 3. | ஐங்குறுநூற்றுக் காட்சி | ... | 5 |
| | கணவன் வினவும் தோழி விடையும் | | |
| 4. | பதிற்றுப்பத்தில் ஒரு காட்சி | ... | 8 |
| | குமட்டூர்க் கண்ணனார் பாராட்டுரை | | |
| 5. | பரிபாடற் காட்சி | ... | 12 |
| | வையையில் புனல் விளையாட்டு | | |
| 6. | கலித்தொகைக் காட்சி | ... | 15 |
| | ஏறு தழுவல் | | |
| 7. | அகநானூற்றுக் காட்சிகள் | ... | 19 |
| | இரண்டு திருமணங்கள் | | |
| 8. | புறநானூற்றுக் காட்சிகள் | ... | 24 |
| | (1) ஔவையாரும் அதியமானும் | | |
| | (2) ஔவையார் அரசியல் தூதர் | | |
| | (3) நெடுஞ்செழியன்—இரும்பொறை போர் | | |

எண் பக்கம்

(4) தலையாலங்கானத்துப் பெரும்போர்
(5) ஆந்தையார் அன்னத்தைத் தூது விடுதல்
(6) பழகா நட்பு

9. சிலப்பதிகாரக் காட்சிகள் ... 47

(1) கோவலன்—கண்ணகி திருமணம்
(2) கோவலன்—கண்ணகி மணவாழ்க்கை
(3) கணவன்—மனைவி கலந்துரையாடல்
(4) கோவலன் கொலையுண்ணல்
(5) கண்ணகி வழக்குரைத்தல்
(6) செங்குட்டுவன் மலைவளம் காணல்
(7) சேரனது வடநாட்டு யாத்திரை
(8) பத்தினி வழிபாடு

10. மணிமேகலைக் காட்சிகள் ... 72

(1) மணிமேகலை மலர்வனம் புகுதல்
(2) சாதுவன் தப்பிப் பிழைத்தல்
(3) நாகர் தீவில் சாதுவன்
(4) ககந்தன் ஆட்சியில் இரண்டு நிகழ்ச்சிகள்
(5) வளவன் வழங்கிய நீதி

# சங்கநூற் காட்சிகள்

## 1. நற்றிணைக் காட்சி

### உத்தம மனைவியின் அச்சம்

**காதலன் வணிகன்**

சங்க காலத்தில் உள்நாட்டு வாணிகம் சிறப்புற நடந்தது. தமிழகத்துப் பண்டங்கள் வடநாட்டுச் சந்தைகளில் நன்கு விலை போயின. மோரியப் பேரரசை ஏற்படுத்திய சந்திரகுப்தனது பெருநாட்டிற்குத் தமிழகத்து முத்துக்களும் விலையேறப்பெற்ற மிக மெல்லிய ஆடைகளும் தமிழ்நாட்டு வணிகராற் கொண்டுசெல்லப்பட்டன. அவ்வாறே கங்கையாற்றுப் பாய்ச்சலால் விளைந்த பொருள்கள் தமிழ்நாட்டில் விலை போயின. தமிழ் வணிகருள் ஒரு சாரார் திரைகடலோடித் திரவியம் தேடினர். பிறிதொரு சாரார் இந்தியாவின் பல பகுதிகட்கும் சென்று வாணிகம் செய்தனர்.

இங்ஙனம் உள்நாட்டு வாணிகம் செய்துவந்த வணிகருள் ஒருவன், 'இன்ன காலத்திற்குள் வருவேன்' என்று தன் உயிரனைய மனைவியிடம் கூறிப் பிரிந்தான்; பிரிந்து சென்றவன் தான் சொன்ன காலத்திற்குள் வரவில்லை. அவனைத் தன் உயிரெனக் கருதிய அருங்குண மனைவி அவன் குறித்த காலத்தில் வாராமையால் மனத்தளர்ச்சி அடைந்தாள். தோழி அவ

ளுக்குப் பலவாறு ஆறுதல் கூறினாள். எனினும் ஆற்றாத தலைவி தோழியைப் பார்த்துக் கீழ் வருமாறு கூறினாள் :

## உத்தம மனைவி

"தோழீ, என் உயிரனைய காதலர் வருவதாகக் கூறிய பருவம் சென்றொழிந்ததால் எனக்குக் கவலை மிகுகின்றது. நீண்ட நெறியையுடைய சுரத்து வழியைப் பார்த்துப் பார்த்து ஒளியற்று என் கண்களும் காணுதற்குரிய பொலிவு அழிந்தன. எனது அறிவும் என்னைக் கைவிட்டு மயக்கமுற்று வேறுகின்றது. உயிரைப் பெயர்த்தற்குரிய மாலைக்காலமும் வந்துவிட்டது. இனி யான் எவ்வண்ணமாவேனோ? அறிந்திலேன்; இவ்வுலகிற் பிறந்தவர் இறப்பர் என்பது உண்மை ஆதலால் நான் இறப்பதற்கு அஞ்சவில்லை. அவ்வாறு இறந்தால், இனி வரும் பிறப்பு மக்கட் பிறப்பின்றி வேறொரு பிறப்பாகி மாறிவிடின், அப்பொழுது என் காதலனை மறப்பேனோ என்று அவ்வொன்றனுக்கே யான் அஞ்சுகின்றேன்."

கணவன்மாட்டு இத்தகைய உண்மை அன்புடைய இப்பத்தினியை எவ்வாறு நாம் போற்றவல்லேம்! உள்ளத்தை உருக்கும் இது போன்ற பல காட்சிகளை நற்றிணையிற் கண்டு களிக்கலாம். நீங்கள் தமிழராதலின், பழந்தமிழ் நூற்களைப் படித்து இத்தகைய பண்டைச் செய்திகளை அறிந்து மகிழ்வீர்களாக!

# 2. குறுந்தொகைக் காட்சி

## கற்புடை மனைவியின் விருப்பம்

### அன்பு வாழ்க்கை

சங்ககாலத் தமிழன் ஒருவன் தன் மனத்திற்கியைந்த மங்கை நல்லாள் ஒருத்தியை மணந்து கொண்டான். அவள் தன் காதலனையே வழிபடு பொருளாகக் கருதிப் பயபக்தியுடன் வாழ்ந்துவந்தாள்; தன் கணவனை உணவு நெறியாலும் தன் ஒழுக்க நெறியாலும் மகிழச் செய்தாள்; அவனுடைய உற்றார் உறவினரை அவனிலும் மேலாக வரவேற்று உபசரித்து அவனுக்கு உவகை ஊட்டினாள்; அவர்களிடமும் நற்பெயர் பெற்றாள்.

கணவன் இல்லாத நேரத்தில் அவள் தன்னை உயிரற்ற உடலெனக் கருதினாள். ஆதலின் கணவன் வேற்றூர் செல்லின், அவன் வீடு திரும்பும்வரை அவள் தன்னை ஆடை அணிகளால் அலங்கரித்துக் கொள்வதில்லை. 'கணவனுக்காக வளர்த்து அழகு செய்யப்பட்ட இவ்வுடல்' என்று காரைக்காலம்மையார் கூறியவாறு, கற்புடை மங்கையர் கணவரை மகிழ்விக்கவே தம்மை ஆடையணிகளால் அழகு செய்துகொள்வர்.

இங்ஙனம் கணவனை இன்புறுத்துவதையே தன் வாழ்க்கையின் நோக்கமாகக்கொண்ட மனைவியை அக்கணவன் விரும்பியதில் வியப்பில்லை அன்றோ? அவ்விருவரும் ஓருயிரும் ஈருடலுமாக இன்புற்று வாழலாயினர்.

## கற்பரசியின் ஆவல்

இவ்வாறு வாழ்ந்து வருகையில் கணவன் நல்லறி விழந்து ஒரு பரத்தையுடன் தொடர்புகொண்டான். கற்பரசியாகிய மனைவி அக்கூடா ஒழுக்கத்திற்காக அவனைக் கடிந்துகொள்ளவில்லை; அவன் வீட்டுக்கு வரும்பொழுதெல்லாம் முன்போலவே முகமலர்ச்சி யுடன் அன்புரை கூறி அவனை இன்புறுத்தினாள்; ஒரு நாள் அவனை மலர்ந்த முகத்துடன் நோக்கி,

"ஐயனே, இப்பிறப்பு நீங்கப்பெற்று நமக்கு வேறு பிறப்பு உண்டாயினும், அப்பிறப்பிலும் இப் பொழுது என்னிடம் அன்பு செய்தொழுகும் நீயே என் கணவனாதல் வேண்டும்; நின் மனத்திற்கு ஒத்த காதலியாக யான் அமைதல் வேண்டும். இதுவே யான் பெற விரும்பும் பேறு," என்று இனிமை தோன் றக் கூறினாள்.

அவளது உள்ளத்திலிருந்து வெளிப்போந்த இந்த நல்லுரை, ஒழுக்கக் குற்றமுடைய கணவனைத் திருத்தி யிருக்கும் என்று கருதுதல் தவறாகாதன்றோ? இத் தகைய பலவகைக் காட்சிகளைக் குறுந்தொகையிற் காணலாம்.

# 3. ஐங்குறுநூற்றுக் காட்சி

## கணவன் வினவும் தோழி விடையும்

### கணவன் வினா

கண்ணகி என்னும் கற்புடை மனைவியோடு இல்லறம் நடத்திவந்த கோவலன் அவளை விட்டு மாதவி என்ற கணிகையுடன் சிறிது காலம் வாழ்ந்தாற்போல, ஒரு தலைவன் கற்புடைத் தன் இல்லாளை விட்டுச் சிறிது காலம் பரத்தை ஒருத்தியுடன் வாழ்ந்துவந்தான்; பின்னர் நல்லறிவு பெற்று, 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டுவந்து தன் மனைவியுடன் வாழலானான். அங்ஙனம் வாழ்ந்துவந்தவன் தன் மனைவியின் தோழியை நோக்கி, "யான் கூடா ஒழுக்கத்தில் இருந்தபொழுது தலைவி என்ன நினைத்தாள்? நீயும் பிற தோழியரும் என்ன நினைத்தீர்கள்?" என்று ஆவலோடு கேட்டான்.

### தோழி கூற்று

"ஐயனே, 'காவற்பொருட்டு நாடாளும் மன்னன் வாழ்க! விருந்தாற்றுதற்காக நெல் விளைக; இரவலர்க்கு ஈதற் பொருட்டுச் செல்வம் உண்டாகுக,' என்று தலைவி (நின் மனைவி) கடவுளை வேண்டினாள். நாங்களோ, நீ ஒழுகிய ஒழுக்கத்தால் உனக்குத் தீங்கு வருமென்று அஞ்சித் 'தலைவன் வாழ்க' என வேண்டினோம். தலைவி இல்லற வாழ்க்கையை விரும்பி ஒழுகினாள். நாங்கள், நின் அன்பு அவள்மேல் வழி வழிச் சிறக்க என வேண்டினோம். 'கால் நடைகள் சிறந்து வாழ்க; பால் பெருகுக,' எனத் தலைவி

வேண்டினாள்; 'தலைவன் பொது மனையில் வாழ்க்கை ஒழித்துத் தன் மனையில் வாழ்வானாக,' என நாங்கள் கடவுளை வேண்டினோம். 'உலகிற் பசி இல்லா தொழிக; மக்களை வருத்தும் பிணிகள் ஒழிக,' எனத் தலைவி வேண்டினாள்; 'தலைவனது தேர் பிற மகளிர் வாசலில் நிற்பதை விடுத்து நமது வீட்டு முன்பு நிற்பதாக' என நாங்கள் வேண்டினோம். 'நாட்டில் போர் உண்டாகா தொழிக; குடிகளிடம் அமைதியே நிலவுக,' எனத் தலைவி வேண்டினாள்; 'ஊரைத் தாமரைக்குளம் அழகு செய்வதுபோலத் தலைவன் எமதில்லத்தை அழகு செய்வானாக,' என்று நாங்கள் வேண்டினோம். 'உலகில் அறச்செயல்கள் பெருகுக; தீச்செயல்கள் கெடுக,' என்று தலைவி வேண்டினாள்; 'தலைவனது உள்ளன்பு தலைவிக்கு எஞ்ஞான்றும் நிலைப்பதாக,' என நாங்கள் வேண்டினோம்,'' என்று தலைவனை நோக்கித் தோழி மலர்முகத் துடன் பதிலளித்தாள். இவற்றைக் கேட்ட தலைவன் உள்ளத்தில் ஒருவராலும் கரை செய்ய அரியதொரு பேருவகைக் கடல் பெருகி அவனை மகிழ்வித்தது. மேற்கூறிய பதிலில் தலைவி உலக நன்மையிற் கொண்ட நாட்டமும் இல்வாழ்க்கையிற் கொண்ட நன்னோக்கமும் நன்கு புலனாகும். இத்தகைய சீரிய நங்கையின் வாழ்வு சிதையாமல் இருக்கவேண்டுமே என்ற கவலையால் அவளுடைய தோழிப் பெண்கள் தலைவன் நல்லொழுக்கம் பெறவேண்டும் என்று கடவுளை வேண்டினர்.

## ஐங்குறுநூற்றுச் சிறப்பு

இத்தகைய சிறந்த-ஒழுக்கத்தையும் உலக நலத் தையும் வற்புறுத்தும் பல செய்திகள் ஐங்குறுநூறு

என்னும் சிறு நூலிற் காணலாம். இந்நூலில் 500 சிறு பாக்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொரு நூறும் ஒரு புலவராற் பாடப்பட்டவை. ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் என்ற புலவர் ஐவரின் பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. நீங்கள் உரிய பருவத்தில் இந்நூலைப் படித்து மகிழ்வீர்களாக.

# 4. பதிற்றுப்பத்தில் ஒரு காட்சி

## குமட்டூர்க் கண்ணனர் பாராட்டுரை

### முன்னுரை

நெடுஞ்சேரலாதன் இளமையிலேயே மிகுந்த வீரமுள்ளவனுக விளங்கினுன். அவன் முடி சூடிய வுடன் வடநாட்டின்மேற் படையெடுத்துச் சென்றுன்; அங்கிருந்த அரசர்களை வென்றுன்; இமயமலேயில் தனது விற்கொடியை எழுதுவித்தான். இதனுல் அவனுக்கு 'இமயவரம்பன்' என்ற சிறப்புப் பெயர் கிடைத்தது. அவனை எதிர்த்த, யவனர்கள் அவனிடம் தோல்வியுற்றுச் சிறைப்பட்டனர். அவர்கள் தலேயில் நெய் பெய்யப்பட்டது; கைகள் பின்புறம் சேர்த்துக் கட்டப்பட்டன. விலேயுயர்ந்த நகைகளும் மேன்மையான வயிரங்களும் அவர்களிடமிருந்து கப்பப் பொருளாகக் கைப்பற்றப்பட்டன. அவன் அவற்றைச் சேரநாட்டுக்குக் கொண்டுவந்து, வீரர்க்கும் புலவர்க்கும் பரிசளித்தான்; தன்னை எதிர்த்த அரசர் அனைவரையும் வென்றடக்கிப் பேரரசனுக விளங்கினுன். இங்ஙனம் அப்பேரரசன் 58 ஆண்டுகள் சேரப் பேரரசனுக வாழ்ந்தான்.

### புலவர் பாராட்டுரை

இமயவரம்பனது உள்ளங்கவர்ந்த பைந்தமிழ்ப் புலவருள் குமட்டூரைச் சேர்ந்த கண்ணனுர் என்பவர் ஒருவர். அவர் சேரனுடைய போர்ச்செயல்களைக் கேள்வியுற்றுப் பெருமகிழ்ச்சி அடைந்தார்; அவனைச் சென்று கண்டு, தம் பாராட்டலைத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்பினுர்; வஞ்சி மாநகர்க்குச் சென்று

சேரவேந்தனைக் கண்ணுற்றார். அரசன் புலவரை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தான். புலவர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்து சேரர் பெருமானை மலர்ந்த முகத்துடன் நோக்கி அவன் வெற்றிகளையும் பிற சிறப்புகளையும் பின்வருமாறு பாராட்டினார் :

" போர்க்களத்தில் நின்னை எதிர்த்த பகைவரைக் கொல்லத்தக்க தோள்வலி மிக்க படைகளையுடைய நெடுஞ்சேரலாதனே, அன்புடன் வண்டுகள் சூழ்ந்து அருந்தத்தக்க தேன்வளம் மிக்க மலர் மாலைகளை அணிந்த மார்பினை உடையாய் ! நீ வெற்றி வழங்கிய போர்கள் பலவற்றைக் கண்டுள்ளாய். முள்ளைக் கொண்ட முருக்க மரங்கள் நெருங்கி நிற்கும் மலைச் சாரல்களையுடைய இமயமலை காணத்தக்கதாகும். அம்மலைச்சாரல்களில் கவரிமான்கள் முனிவர்தம் முருக்க மரங்களாலும் பிற விலங்குகளாலும் மக்களாலும் எவ்வகை இடையூறும் இன்றி இராக்காலத்தில் இனிதாக உறங்கிக்கொண்டிருக்கும். அப்பொழுது, அவை பகற்காலத்திற் பருகி மகிழ்ந்தனவும் பரவி விழுகின்றனவுமான அருவிகளுடனே, மேய்ந்து சுவை கண்ட நாரத்தை மரங்களையும் கனவிற்காணும். முனிவர் பலர் அம்மலைச் சாரல்களில் வாழ்கின்றனர். இத்தகைய சிறப்புடைய இமயமலை முதல் தெற்கே யுள்ள குமரி முனைவரை காணப்படும் பல நாடுகளில் வாழும் அரசருட் புகழ்மிக்க பேரரசர்களது பெருமை கெடும்படி நீ அவர்களைப் போரில் முறியடித்தனை.

" நீ உன் பகைவரின் காவல் மரமாகிய திரண்டு அழகிய கடம்ப மரத்தின் சிறந்த அடிப்பாகம் முழுவதும் சிதைந்து துகளாகும்படி படைகளைச் செலுத்தினை. அக்கடம்பமரம் மிக்க வன்மையும் உயர்ந்த ஊக்கமும் உடைய வீரர் பலராற் சூழ்ந்து

பாதுகாக்கப்பட்டிருந்தது. நீ அவ் வலிமிக்க வீரரையும் அவர்கள் நின்று காவல் செய்த காவல் இடங்களையும் கண்காணுவாறு அழித்தனை. அப்பொழுது கணக் கற்ற படைவீரர் நின்னை எதிர்த்தனர். நீ அவர்களைக் குருதியாற் சிவந்த வாயினையுடைய கைவேலால் குத்தினை. அதனால் அவர்தம் மார்புகள் திறக்கப் பட்டன. அவ்வாறு திறக்கப்பட்டதனால் உண்டான புண்களிலிருந்து குருதி வெள்ளம் கொப்புளித்துப் புறப்பட்டது. அதனால், அருகிப் பெரிய கடற்கழி களில் இருந்த நீர் நீலமணிபோன்ற நிறம் மாறப் பெற்றுக் குங்குமச் சாந்துபோலக் குழம்பியது. உடனே நினது வெற்றியைக் குறிக்கும் முரச வாத்தியம் முழங்கியது.

"மிக்க சினத்தையும் வலியையும் உடைய குமரக் கடவுள் யானைமீது ஏறிச் சென்றாற்போல நீ பொன் னால் அணிசெய்யப் பெற்ற பட்டத்தியானையின் பிடரி யில் அமர்ந்து செல்பவன்; புலவர் பலராற் புகழ்ந்து பாடப்பட்ட செல்வவளம் படைத்தவன். அச்செல்வ வளத்தைப் புலவர்களாகிய நாங்கள் கண்டு மகிழ் கின்றோம். பெரும, நின் கொற்றம் வாழ்க! நினது அரசு தழைக!"

## பதிற்றுப்பத்தின் சிறப்பு

இங்ஙனம் புலவர் பாராட்டிய பகுதி ஒரு செய் யுளின் கருத்தாகும். அவர் மேலும் ஒன்பது செய்யுட் களில் அவன் சிறப்புக்களைப் பாராட்டியுள்ளார். இவ்வாறே ஒவ்வொரு சேரமன்னவனும் பத்துச் செய்யுட்களில் பாராட்டப்பட்டுளன். இங்ஙனம் சேரர் பதின்மர் பப்பத்துப் பாக்களிற் பாராட்டப் பெற்றமையின், இந்நூல் **பதிற்றுப்பத்து** எனப்பெயர்

பெற்றது. இந்நூல் சேரர் புகழை விரிக்கும் தனிநூல். இதில் சேரர்தம் போர்ச்செயல்கள், சேரநாட்டுப் பழக்க வழக்கங்கள், மக்கள் நாகரிகம், இறை வழிபாடு முதலிய பல விவரங்கள் காணக் கிடைக்கின்றன. இவ்வரிய நூலைப் படித்து இன்புறுதல் உங்கள் கடமை யாகும்.

## 5. பரிபாடற் காட்சி

### வையையில் புனல் விளையாட்டு

மேகம் கடல்நீரை முகந்து, நீர் நிறைதலால் சுமை தாங்காது தவித்தது; அதனால் தன் சுமை தீர்ந்து இளைப்பாற அந் நீரை நிலத்தின்மேற் பொழிந்தது; பொழியவே, ஊழிக்காலத்தில் நிலம் மறையும் வெள்ளம்போலே வெள்ளம் தரைமீது பரந்தது. மழையைக் கண்டு மயில்கள் வரவேற்று அகவின; மான் முதலிய விலங்கினங்கள் உள்ளம் கலங்கின; மலையின் உச்சியிலிருந்து நாலாப்பக்கங் களிலும் மழைநீர் பல அருவிகளாகப் பெருக்கெடுத்துத் தாழ்வரையை அலங்கரித்தன; பின்னர் அவை தரையில் நாலாப் பக்கங்களிலும் பரவிப் பள்ளமாகிய வையையிற் சேர்ந்தன. அதனால் ஆற்றில் வெள்ளம் மிகுந்தது; நீர் கரைபுரளச் சென்றது. பாராட்டத் தக்க அறிவினையுடைய நாவாற் புலவர் பாடிய நற் செய்யுள் பொய்யாகாமல் நிலைநாட்ட, வெள்ள நீர் எங்கும் பரந்தது. அதனால் உழவு முதலிய தொழில்கள் பெருக வழி உண்டாயிற்று.

**புனல் விளையாட்டு**

புதுப்புனலில் நீராடு மகளிர் தமக்கு ஈரம் புலரப் புகைக்கப்படும் அகில் மரம் முதலியவற்றையும் அவை புகைத்தற்கு அழலும் சூடுதற்குப் பூவும் வையைக்குப் படையலிட்டு வணங்கச் சிலபொருள்களும், வெள்ளத் திற்போக விடுதற்காகப் பொன்மீன், பொன் இறால், பொன் நண்டு முதலியனவும் ஏந்தித் தம் கணவன் மாருடன் வையை நோக்கிச் செல்லலாயினர். அவர்கள் தத்தம் தகுதிக்கேற்ப யானைமீதும் குதிரைமீதும்

வண்டிகளிலும் சென்றனர். அவர் அனைவரும் பலவாறு நீரில் நின்று தம் களிப்புத் தோன்றக் குடைந்து நீராடினர். அவர்கள், பூசியிருந்த சந்தனக் குழம்பும், பலவகை மணப் பொருட் கலவையும் நீரிற் கலந்தன ; சூடிய மலர்கள் ஆற்றிற் பரந்தன. இவற்றால் வையைப் புனல் மணப் புனலாக மாறியது.

## வேறுபட்ட புனல்

அவ்வாறு மணம் நாறிய வையை நீரை—மறை போற்றிய அந்தணர் கண்டு, அது தூய்மை கெட்டு வேறுபட்ட புனலென மருண்டு நீராடலும் வாய் பூசலும் முதலிய தம் தொழில் செய்யாது நீங்கினர். மகளிர் சூடிக் கழித்த மென்மலரும் மைந்தர் தாரும் மகளிர் கோதையும் கரையிலிருந்த மரங்களின் பட்ட வேர்களும் தாரும் காய்களும் கிழங்குகளும் வையைப் புனலில் மிதந்து சென்றன. கட்குடி மாக்கள் புது நீரைப் பருகியதால் அவர் வாயிலிருந்து உகுத்த கள் நீரிற் கலந்தது. இவை அனைத்தாலும் வையைப் புனல் நீராடும் தகுதி உடையதன்று என்று சிலர் வீடு திரும்பினர்.

## நீரில் மகளிர்-மைந்தர் விளையாட்டு

பெண்கள் நீராடுகையில் ஒருவர்மீது ஒருவர் நீரைத்தூவி விளையாடினர் ; ஒருத்தி கண்கள்மீது மற்றவள் நீரைத்தூவி நகைத்தாள். ஒருத்தி நீருக்கஞ்சித் தன்கண்களைக் கையாற் புதைத்தாள். மற்றொருத்தி தன்கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த பொன்னணியால் அவளுடைய தோள்களைக் கட்டிச் சிறையாகப் பிடித்தாள். இவ்வாறும் பிறவாறும்

மகளிர் வையைப் புதுப்புனலில் இனிது விளையாடினர். யாழோசையும் மிடற்றுப் பாடலும் தம்முள் ஒக்க, வங்கியம் அவற்றின் சுருதியை அளந்து நிற்ப, முழவு எழுந்து ஆர்ப்ப, அரங்கேறி நடனமாடிய தலைக் கோல் மகளிரும் பாணரும் பெருமுழக்கம் செய்து கொண்டு புனலாடினர். இங்ஙனம் பல துறைகளி லிருந்து நீராடிய ஆடவர் – பெண்டிர் புனலாட்டு ஓசையும் வையைப் புனல் இருகரைகளிலும் மோதும் ஓசையும் மதுரைமக்கள் செவிகளை அடைத்தன.

நீராடிய மகளிர் முன்சொல்லப்பட்ட படையற் பொருள்களை வையை யாற்றுக்குப் படைத்தனர்; தாம் கொண்டு சென்ற பொன்மீன் முதலியவற்றை ஆரவாரத்துக்கிடையே புதுவெள்ளத்தில் போகட் டனர்; பின்னர், "வையாய், இன்றுபோல என்றும் வந்து' நாட்டுக்கும் எங்கட்கும் இன்பத்தைச் செய்வா யாக," என்று வாழ்த்தித் தத்தம் இல்லம் ஏகினர்.

## பரிபாடற் சிறப்பு

பரிபாடல் என்பது எட்டுத் தொகையுள் ஒன்று. இது சொற்சுவை, பொருட்சுவைகளிற் சிறந்து பொருள்களின் இயற்கை அழகுகளைத் தெரிவிப்பது; மதுரை, வையை, திருப்பரங்குன்றம், அழகர்மலை என்பவற்றின் பண்டைக்கால நிலைமைகளையும் அக்கால நாகரிக முறையையும் பிற வழக்கங்களையும் கடவுள்வழிபாட்டு முறைகளையும் அறிய உதவி செய்வது. நீங்கள் உற்ற வயதில் இவ்வரிய நூலினைப் படித்து இன்புறுக!

# 6. கலித்தொகைக் காட்சி

## ஏறு தழுவல்

**முன்னுரை**

காடும் காடுசூழ்ந்த நிலமும் முல்லை எனப்படும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானிலங்களில் முல்லை ஒன்று. அங்கு வாழ்பவர் ஆயர் அல்லது இடையர் என்பவர். அவர்கள் ஆனிரைகளை மேய்த்தலும் பால், தயிர் முதலியவற்றை வாணிகம் செய்தலும் தொழிலாக உடையர். அந்நிலத்தார் வீரச் செயல்களுட் சிறந்தது ஏறு தழுவல் என்பது. அஃதாவது வீரன் வலிமை மிக்க எருது ஒன்றனை அடக்கித் தழுவிக்கொள்ளல் என்பது. இம் முயற்சியில் பலர் இறந்துபடுதலும் உண்டு. சிலரே வெற்றி பெறுவர். வெற்றிபெற்றாரை ஆயர் மகளிர் விரும்பி மணப்பர். ஆயர் மகளிரை மணக்க இஃதொரு நிபந்தனையாக விதிக்கப்படலும் உண்டு. கண்ணபிரான் நப்பின்னை என்னும் ஆயர் மகளை மணக்க ஏழு ஏறுகளைத் தழுவினன் என்பது வரலாறு. இவ்வழக்குப் பண்டைத் தமிழகத்தும் இருந்துவந்தது என்பது கலித்தொகைச் செய்யுட்களிலிருந்து நன்கறியலாம்.

ஏறு தழுவல் விழா பண்டைக் காலத்தில் ஆண்டு தோறும் குறித்த காலங்களிலாவது, ஆயர் மகள் ஒருத்தியை மணக்க விரும்பியவன் உரிய ஏற்றினைத் தழுவ முன்வந்த காலத்திலாவது நிகழ்ந்துவந்ததெனக் கொள்ளலாம். ஏறுகட்கு உரியவரும் ஏறு தழுவுபவரும் பிடவம், செங்காந்தள், காயா, கொன்றை, வெட்சி, முல்லை, கஞ்சங்குல்லை, குருந்து முதலிய மலர்களாலும் கொத்துக்களாலும் ஆகிய

மாலையும் கண்ணிகளையும் அணிந்து, செந்துவராடை பூண்டு திரண்டு கூடுவர்; முல்லை நிலக் கடவுளாகிய மாயோனையும் ஊர்த் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டு தத்தம் அலுவல்களிற் புகுவர்.

## ஏறுகள்

ஆய வீரரால் தழுவப்பெறும் ஏறுகள் பல நிறத்தன: வானிடத்து விரிந்த திங்கள் நிறத்தவை சில; திருமாலினிடத்துள்ள சங்கு நிறத்தவை சில; அழகிய நெற்றிச் சுட்டியையுடைய கரிய நிறக் காளைகள் சில; கார்மேகம் சூழும் மலையிடத்து நின்று வீழ்கின்ற அருவிகள்போல அழகிய வெள்ளைக் கால் களையுடைய 'காரிகள்' சில; பலராமனது திருமார்பில் விளங்கும் சிவந்த மாலைபோலச் சிவந்து நீண்ட, கொடி மறுவினையுடைய 'வெள்ளைகள்' சில; விண் மீன்களுடன் விளங்கும் செவ்வானம் போல அழகிய வெள்ளைப் புள்ளிகளையுடைய சிவந்த நிறத்தன வாகிய 'சேய்கள்' சில; சிவபிரான் திருமிடற்றின்கண் தோன்றும் கருமைபோலக் கரிய கறையினையுடைய கழுத்தினையும் உயர்ந்து வளர்ந்த திமிலினையும் உடைய கபில நிறங்கொண்ட 'குரால்கள்' சில; தெளி வாகத் தோன்றும் சிவந்த சிறு புள்ளிகளைக் கொண்ட 'வெள்ளைகள்' சில. இவை மதக்களிற்றினும் அஞ் சாமை மிக்குடையன; காலாலே தரையை வெட்டி இடையறுது தூளியை எழுப்புவன; கொம்புகளாற் குத்தவல்லன; ஒன்றை ஒன்று மோதிக் கொம்புகளாற் குத்திக்கொண்டிருப்பன; உடம்பிலிருந்து வடியும் குருதியால் மூடப்பெற்றுச் சிவந்த மேகங்களை ஒத்திருப்பன. இத்தகைய ஏறுகளை அவ்வவற்றுக் குரிய ஆயர் பிடித்து, அவற்றின் கொம்புகளை

முள்ளின் முனைபோலக் கூரியனவாகச் சீவி, வழுக்கு மாறு நெய் பூசி, நீராட்டித் தொழுவினுள் விட்டு வைப்பர். அவை கூற்றுவனை ஒப்பச் சினந்து, மருண்டு, தொழுவிற் சுழன்றுகொண்டிருக்கும்.

## ஏறு தழுவல்

ஏறு தழுவுதற்குரிய நேரத்தில் பறையும் கொம்பும் முழவும் பிற வாத்தியங்களும் இடியோசைபோல முழங்கும். ஆயர் அப்பொழுது தொழுவினைத் திறந்து ஏறுகளை விடுப்பர். ஏறு தழுவ நிற்கும் வீரர் தாம் தாம் குறித்த ஏறுகள்மீது புலியெனப் பாய்ந்து கொம்புகளை இறுகப் பற்றுவர்; தவறினுல் கொம்பிடை வீழ்ந்து கழுத்தினைப் பற்றுவர்; கழுத்திடத்தில் மாலை போல அடங்கிக் கிடப்பர்; சிலர் கொண்டையைத் தழுவுவர்; சிலர் தம் தோளுக்கு நடுவில் ஏற்றின் கழுத்தைப் புகுத்திவிட்டுப் பிடிப்பர்; அங்ஙனம் பிடிக்கும்பொழுது கொம்புகள் வீரர் தோளைத் தாக்கு தலும் உண்டு. வீரர் அத்தாக்குதலைப் பொறுத்து ஏற்றினை இறுகப் பிடிப்பர். சில ஏறுகள் தம்மை எதிர்ப்புறத்தில் வந்து பிடிக்க வருபவரை வயிற்றிற் குத்தித் தூக்கி எறிதலும் உண்டு. அங்ஙனம் குத்தியவுடன் குடர் வெளிப்பட்டு எருதின் கொம்பு களில் மாலை போலச் சுற்றிக்கொள்ளலும் உண்டு. ஏறு தழுவலில் இறப்போர் சிலர்; காயமுறுபவர் சிலர்; ஏறுகளை அடக்கித் தழுவி வெற்றி பெறுபவர் சிலர்.

## குரவைக் கூத்து

இவ்வாறு ஏறு தழுவுதற்கு உரிய நாளுக்கு முன் னுள் மாலையில் அல்லது ஏறு தழுவும் நாளில் ஊர்ப்

பொது மன்றத்தில் ஆடவரும் பெண்டிருமாக எழுவர் அல்லது ஒன்பதின்மர் கூடிக் கைகோத்து வளைந்து நின்று பாடி ஆடுவர். அது குரவைக் கூத்து எனப் படும். அப்பொழுது (ஏறு தழுவு நாளுக்கு முன்னு ளாயின்) காதலியர் தம் காதலரை நோக்கி, 'எம் தந்தையார் குறித்துள்ள ஏறுகளைத் தழுவுபவர்க்கே யாம் உரியோம்; ஆதலின் காதலர் நாளை முனைந்து வெற்றி பெறுவாராக," என்னும் கருத்தினைத் தம் பாட லால் தெரிவிப்பர்; "உமக்குரிய ஏற்றினைத் தழுவா விடின், இப்பிறவியில் மட்டுமன்று, இனிவரும் பிறவி யிலும் எம்மை நீர் அடைதல் இயலாது," எனக் கூறிக் காதலரை ஏறு தழுவலில் வெற்றி பெறுமாறு தூண்டுவர்; ஏறு தழுவிய பின்னர்க் கூத்து நிகழு மாயின், தம் காதலரது வெற்றியைப் பாராட்டிப் பாடி யாடுவர்; இறுதியில் தம் முல்லை நிலக் கடவுளான மாயோன் புகழைப் பாடிக் கூத்தினை முடிப்பர்.

## கலித்தொகைச் சிறப்பு

ஏறுதழுவல் ஆகிய இக்காட்சி கலித்தொகை என் னும் சங்க நூலுள் ஒரு பிரிவாகிய முல்லைக்கலி யில் குறிக்கப்படுவது. அப்பெருநூலுள் குறிஞ்சிக் கலி, பாலைக்கலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெற்தற் கலி என்னும் ஐந்து பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு பிரிவிலும் பல பாக்கள் உள்ளன. அவை அக்கால மக்கள் பழக்க வழக்கங்களையும் பல்வேறு செய்தி களையும் ஐந்து நிலங்களின் அமைப்பையும் மிகத் தெளிவாக விளக்குவன.

# 7. அகநானூற்றுக் காட்சிகள்

## இரண்டு திருமணங்கள்

### இருவகைத் திருமணம்

சங்ககாலத் திருமணங்கள் பெரும்பாலும் இரு வகைப்பட்டன. ஒத்த மனவுணர்ச்சியுடைய நங்கையும் நம்பியும் தம்முள் எதிர்ப்பட்டு, உறவுகொள்வர் ; அவ்வுறவு ஏறத்தாழ இரண்டு திங்கள் பிறர் அறியாமல் நடைபெறும். பின்னர் நங்கையின் உண்மைக் காதலை உணர்ந்த பெற்றோர் அவள் விரும்பியவனுக்கே அவளை மணம் முடித்துத் தருவர். சில சந்தர்ப்பங்களில் அவளது காதலை அறிந்து கொள்ளாமல், அவளை வேறொருவனுக்கு மணம் செய்விக்கப் பெற்றோர் முனைதலும் உண்டு. அந்நிலையில் காதலி தன் காதலனுக்கு அச்செய்தியை அறிவிப்பாள். அவன் தன் பெற்றோரை மணமகள் வீட்டுக்கு ஏவி மணம் இசைவிப்பான். பிறகு பலர் அறியத் திருமணம் நடைபெறும். காதலி குறித்தவனுக்குப் பெற்றோர் மணம் செய்விக்கவில்லையாயின், அவள் தூண்டுதலால் காதலன் ஓர் இரவில் போந்து, அவளைப் பிறர் அறியாது தன் ஊர்க்கு அழைத்துச் செல்வான். காதலியின் உடன்பிறந்தாரும் பிறரும் அக்காதலனை எதிர்க்க முற்படுவர் ; அந்நிலையில் பெரியோர் காதலின் திறத்தை விளக்க, பெண்ணைச் சேர்ந்தோர் அவர்தம் மணத்திற்கு இசைந்து உடன்படுவர். அந்நிலையில் திருமணம் மணமகன் வீட்டில் நடைபெறும் ; இன்றேல் மணமகள் இல்லத்தில் நடைபெறும். இவ்வாறு பலர் அறிய நடைபெறும் மணம் **கற்பு மணம்** எனப் பெயர் பெறும். காதலன், காதலி

என்ற இருவர் மட்டும் தனி முறையில் விரும்பி வாழ்தல், அஃதாவது, கற்பு மணத்திற்கு முற்பட்ட அவர்களது வாழ்க்கை **களவு மணம்** எனப்படும். முனிவர் ஆசிரமத்தில் வளர்ந்த சகுந்தலையைத் துஷ்யந்தன் கண்டு அவள் இசைவு பெற்று அவளைக் காதலித்த வாழ்க்கை களவு மணம் எனப்படும். இதனை வடநூலார் 'காந்தருவ மணம்' என்பர். பண்டைத் தொகை நூல்களான அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை முதலியவற்றில் இக்களவு மணத்தைப் பற்றிய பாக்களே பலவாகக் காண்கின்றன.

இவ்வாறு முதலிற் களவு மணம் நடந்த பின்னர்க் கற்பு மணம் நடைபெறுதல் ஒரு வகை. இங்குக் கூறப் பெற்ற களவு இன்றியும் கற்பு நிகழும் என்பதற்குக் கோவலன்—கண்ணகி திருமணமே ஏற்ற சான்றாகும். அக்கால நகரங்களிற் பெரும்பாலும் இவ்வகை மணமே பெரு வழக்குப் பெற்றிருந்தது எனவும், பிற நிலப்பகுதிகளில் களவின் வழி வந்த கற்பு மணமே பெரு வழக்காயிருந்தது எனவும் கூறுதல் தவறாகாது.

**களவு—கற்பு**

காதலி காதலனை முதலிற் சந்திப்பது முதல் பலர் அறிய மணம் நடைபெறும்வரை நிகழும் செய்திகளை விளக்கமாகக் கூறும் பகுதி **களவியல்** எனப்படும்; மணம் நடந்த பிறகு வாழ்க்கையில் நடைபெறும் கணவன்—மனைவி பற்றிய செய்திகளைச் செப்பும் பகுதி **கற்பியல்** எனப்படும். தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில் களவியல், கற்பியல் என்னும் பகுதிகளைக் காணலாம்; **இறையனார் களவியல்** என்னும் நூல் களவியலைப் பற்றியது. நம்பி அகப்

பொருள் இலக்கணம் என்பது களவியல், கற்பியல் களைக் கொண்ட நூலாகும். இவ்விலக்கண நூல் களுக்கு இலக்கியமாக முன் சொல்லப்பட்ட தொகை நூல்களும் பிற்காலக் கோவை நூல்களும் இருக்கின் றன. ஒருவனையும் ஒருத்தியையும் பற்றிய இன்ப வாழ்க்கைச் செய்திகள் புறத்தே வெளிப்படத் தக்கவை அல்ல ஆதலின் **அகப்பொருள்** எனப் பட்டன. ஏனைய அறம், பொருள், வீடு என்பவை பற்றிய செய்திகள் **புறப்பொருள்** எனப்பட்டன. புறநானூறு, பதிற்றுப் பத்து என்பன புறப்பொருள் பற்றிய நூல்கள்.

இனிச் சங்க காலத்தில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சிகளை இங்குக் காண்போம்:

I

## திருமண நிகழ்ச்சிகள்

சங்க காலத்தில் ஒரு சிற்றூரில் 'திருமணம் நடந் தது. அது களவின்வழி வந்த கற்பு மணம். வீட்டு முற்றத்தில் பெரிய பந்தல் போடப்பெற்றிருந்தது. அப்பந்தலில் புதிய மணல் பரப்பப்பெற்றிருந்தது. ஒரு விளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருந்தது. ஒரு பக்கம் உழுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த நன் ருய்க் குழைந்த பொங்கலுடன் பெரிய சோற்றுத் திரளையுடைய உணவுப் பொருள்கள் முறையாகப் படைக்கப்பட்டு விருந்து நடைபெற்றுக்கொண் டிருந்தது. பந்தலில் நாலாப் பக்கங்களிலும் மாலைகள் தொங்கவிடப்பெற்றிருந்தன.

திங்களும் உரோகிணியும் கூடிய நல்ல நாளில் மிக்க இருள் நீங்கிய அழகு பொருந்திய விடியற்காலை யில் மணப் பந்தரில் மண வாத்தியங்கள் முழங்கின.

மணத்தினைச் செய்துவைக்கும் ஆரவாரமுடைய முதிய மங்கல மகளிர் மணமகளை நீராட்டுதற்கு மங்கல நீரைக் கொண்ட குடங்களைத் தம் தலைகள்மீது தாங்கி நின்றனர்; கைகளிற் புதிய 'மண்டை' என்னும் கலத்தினை ஏந்தி நின்றனர்.

அப்பொழுது ஆண்மகனைப் பெற்ற தூய அணிகளுடைய வாழ்வரசியர் நால்வர் மங்கல நீரை வாங்கி மணமகளை நீராட்ட நீராடும் அறைக்கு வந்தனர். அம்மகளிர் மணமகளை நோக்கி, "கற்பினின்றும் வழுவாமல், நன்றாய பல பேறுகளையும் தந்து, நின்னை எய்திய கணவனை விரும்பிப் பேணும் விருப்பத்தை உடையை ஆகுக," என்று வாழ்த்திக் கொண்டே, நீரில் நெல்லையும் மலர்களையும் கலந்து மணமகட்கு நீராட்டினர்.

பின்னர் மணமகள் புத்தாடை உடுத்து அணிகள் பூணப்பெற்று மணக் கோலத்தில் விளங்கினாள். அவளுடைய பெற்றோரும் உறவினரும் மணவறையிற் புகுந்து, "பெரிய மனைக்கிழத்தி ஆவாய்," எனக் கூறி மணமகனுடன் ஒன்றுபடுத்தினர். இச் செய்திகள் **அகநானூறு** என்னும் நூலில் உள்ள 86-ஆம் பாடலிற் கூறப்பட்டுள்ளன.

## II

### மற்றொரு திருமண நிகழ்ச்சிகள்

மற்றொரு மணவீட்டு நிகழ்ச்சிகள் முன்சொன்னவற்றிலும் சிலவற்றில் வேறுபடுகின்றன. புள் நிமித்தம் இனிதாகக் கூட, ஒளியுடையதும் இடமகன்றதுமான வானம் கலங்கமற்று விளங்க, திங்களை உரோகிணி கூடிய குற்றமற்ற நன்னாட் சேர்க்கையில் மணமனை அலங்கரிக்கப்பட்டிருந்தது. இறைச்சியுடன்

கூட்டி ஆக்கிய நெய் மிகுந்த வெண்சோறு சுற்றத்தார் முதலியவர்க்கு வழங்கப்பட்டது. கடவுள் வழிபாடு நடைபெற்றது. திருமண முழவுடன் பெரிய முரசம் ஒலித்தது. முன் நடைபெற்ற திருமணத்திற் கூறியவாறு புதல்வனைப் பெற்ற வாழ்வரசியர் நால்வர் மணமகளுக்கு வாழ்த்துக் கூறி மணநீராட்டினர்.

பின்னர் மணமகள் புத்தாடையிற் பொலிந்தாள்; மணமகளுக்குரிய அணிகளில் திகழ்ந்தாள். அவள் நெற்றியில் உண்டான வியர்வையைப் பெண்கள் துடைத்தனர். பின்னர் மணமகளுடைய பெற்றோரும் மற்றோரும் மணமகளை மணமகனுடன் சேர்த்து, "வாழ்வரசி ஆகுக" என வாழ்த்தினர். இம்மணச் செய்திகள் அகநானூறு 136-ஆம் பாடலிற் கூறப்பட்டுள்ளன.

## அகநானூற்றுச் சிறப்பு

இத்தகைய திருமணச் செய்திகள், பண்டைத் தமிழ் முடியுடை மூவேந்தர், சிற்றரசர் என்பவர் செய்த போர்களைப் பற்றிய குறிப்புக்கள், புராண-இதிகாசச் செய்திகளைப் பற்றிய குறிப்புக்கள், தமிழர் வாணிகம், கல்வி, தேர்தல், ஆட்சிமுறை முதலியவற்றைப் பற்றிய பல விவரங்கள், தமிழர் இல்லற வாழ்க்கையைப் பற்றிய பல செய்திகள், இறை வழிபாடு முதலியவற்றை அகநானூற்றிற் காணலாம். நீங்கள் பெரியவர்களான பிறகு இச்சங்க நூலைப் படித்து நம் தமிழ் முன்னோரைப் பற்றிய பல விவரங்களை அறிந்து மகிழ்வீர்களாக!

# 8. புறநானூற்றுக் காட்சி

## (1) ஔவையாரும் அதியமானும்

### முன்னுரை

இன்று நமது நாட்டு முதலமைச்சராயுள்ள பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரூவின் தங்கையாரான **விஜயலட்சுமி** அம்மையார் ரஷ்யாவில் இந்திய அரசாங்கத்தின் தூதுவராயிருந்தார். ஓர் அரசாங்கத்தினிடமிருந்து மற்ருேர் அரசாங்கத்திற்குச் சென்று, அரசியல் தொடர்பான செய்திகளைப் பேசி வருபவரும் 'அரசியல் தூதர்' என்றே கூறப்படுவர். இத்தூதருள் பெண்மணிகள் இருத்தலும் உண்டு; ஆயின் அருமை. நமது பண்டைத் தமிழகத்தில், இற்றைக்கு ஏறத்தாழ ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த **ஔவையார்** என்ற நல்லிசைப் புலவர் அரசியல் தூதுவராக விளங்கினுர். இது வியப்புக்குரிய செய்தி அன்ருே?

### சங்ககாலப் புலவர்

புறநானூறு, அகநானூறு போன்ற நூல்களில் உள்ள பாடல்களைப் பாடிய புலவர்கள் 'சங்ககாலப் புலவர்கள்' எனப்படுவர். அவர்கள் வாழ்ந்த காலம் 'சங்ககாலம்' எனப்படும். அப்புலவருள் ஆண்பாற் புலவர் பலர்; பெண்பாற் புலவர் சிலர். அவர் அரச மாதேவியர் முதல் குறமகளிர் ஈருகப் பல வகுப்பினராவர். அவர்கள் பைந்தமிழைப் பாங்குறக் கற்றுக் கவிபாடும் ஆற்றல் பெற்று, அரசரால் மதிக்கப்பெற்று வாழ்ந்தனர். அங்ஙனம் வாழ்ந்த பெண்பாற் புலவருள் தலைசிறந்தவரே ஔவையார் என்பவர்.

**ஔவையார்**

'பண்' என்பது 'இராகம்' எனப் பொருள் படும். பண்களில் வல்லவர் 'பாணர்' எனப்பட்டனர். பாணர் தமிழகத்து இசைவாணர்கள். அவர்கள் பண்டைக் காலத்தில் தமிழிசையை வளர்த்துவந்த பெருமக்களாவர். அப்பெருமக்கள் மரபில் வந்தவரே, திருஞானசம்பந்தர் காலத்தில் வாழ்ந்த திருநீலகண்டயாழ்ப்பாணர் என்பவர்.

இராசராச சோழன் வேண்டுகோள்மீது தேவாரப் பாடல்கட்குப் பண் வகுத்துக் கொடுத்த பெண்மணியார் பாணர் வகுப்பினரேயாவர். இப்பெருமக்கள் தோன்றிய பாணர் மரபில் காலத்தால் முற்பட்டவர் ஔவையார். அவர் இசைத்தமிழ் வளர்த்த மரபில் பிறந்தவராயினும், இயற்றமிழை வல்லாரிடம் நன்கு பயின்று சங்ககாலப் புலவருள் சிறந்து விளங்கிய சிலருள் ஒருவராயினர்.

**புலவர் வாழ்க்கை**

சங்ககாலப் புலவர் வறுமையில் வாடியவர். அதனால் அவர்களுட் பலர் தமிழ் நெடுநில மன்னரையும் குறுநில மன்னரையும் தேடிச்சென்று, கவி பாடி அவர்களை மகிழ்வித்து, அவர்களிடம் பொன்னும் பொருளும் பெற்று வாழ்ந்தனர். சிலர் ஒவ்வோர் அரசனைச் சார்ந்து அவனது அவைக்களப் புலவராகி வாழ்ந்துவந்தனர். பண்டைக்காலத் தமிழரசர் தமிழைத் தம்முயிரெனக் கருதி, அதனை வளர்ப்பதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தமையால், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் வல்ல புலவர்களை ஆதரித்துவந்தனர்; தமது பெரும் பொழுதைப் புலவரிடையே கழித்தனர். புலவர்கள்

அவ்வரசர்களைத் தம்முயிர்த் தோழராய்க் கருதி, உண்மையன்பு உடையராய் அவர்களுடன் மன வொருமைப்பாடு உற்று வாழ்ந்துவந்தனர்.

## ஔவையாரும் அதியமானும்

**அதியமான்** என்பவன் கொங்குநாட்டுத் தகடூரை ஆண்டுவந்த சிற்றரசன். தகடூர் என்பது இக்காலத் தருமபுரி என்னும் ஊராகும். அதற்கு அருகில் உள்ள 'அதமன் கோட்டை' என்பதே சங்க காலத்து 'அதியமான் கோட்டை' என்று ஆராய்ச்சி யாளர் அறைகின்றனர். அதியமான் அக்கோட்டையி லிருந்து தகடூர் நாட்டைத் தண்ணளி சுரக்க ஆண்டு வந்தான். அவன் அருங்கலை விநோதன்; முத்தமி ழையும் முறையாகக் கற்ற அறிஞர்களை அவர்தம் வரிசை அறிந்து பெருமைப்படுத்திவந்தான்; கண் களை இமைகள் காப்பதுபோலக் குடிகளைக் காத்து வந்தான். இவ்விரு நற்செயல்களாலும் அவனது பெயர் தமிழகத்திற் புலவரிடையே பரவலாயிற்று. கல்வி கேள்விகளிற் சிறந்த ஔவையார் அதியமா னின் அரிய பண்புகளைக் கேள்வியுற்ருர்; அப்பெருமா னைச் சென்று காண விழைந்தார். "கற்ருரைக் கற்ருரே காமுறுவர்" அல்லவா?

அதியமான் ஔவையாரது பெரும் புலமையை முன்னரே கேள்வியுற்றவன் ஆதலால், அவரை முறுவல்பூத்த முகத்துடன் வரவேற்று, அறுசுவை உண்டி அமைவுற அளித்து மகிழ்வித்தான். அவனது அன்பினில் திளைத்து மகிழ்ந்த ஔவையார் சின்னுள் இருந்து, பின்னர்த் தம் ஊர் திரும்ப விரும்பினுர். அவரை விட்டுப்பிரிய மனமிசையாத புரவலன் - அதியமான் பரிசில் கொடாது நீட்டித்தான். அவனது

உள்ளக் கருத்தை உள்ளவாறு உணராத ஔவையார் அவன் தம்மை அவமதிப்பதாக எண்ணினர்; மனம் நொந்தார்; சீற்றம் கொண்டார்; உடனே அரண் மனையைவிட்டு வெளியேற முயன்றார்.

அதியமான் அறிஞன் ஆதலின் ஔவையாரது கருத்தை உணர்ந்தான்; ஓடோடியும் சென்று அவரை வழிமறித்து அரண்மனைக்கு அழைத்து வந்தான்; தான் காலம் தாழ்த்தியதன் கருத்தினை அவரது உள்ளத்தில் நன்கு பதியுமாறு உரைத்தான். அவனது பெருந்தன்மையை உணர்ந்த புலவர் பெருமாட்டியார் தமது அவசரப்பட்ட செயலுக்காக வருந்தினர்; அவனது நல்லெண்ணத்தைப் பாராட்டி னர்; அவனது அவைக்களப் புலவராக அமர்ந்தார்; போர்க்களத்திலும் அவனை விட்டுப் பிரியாதவராயி னர். அதியமான் ஔவையாரின் பெரும் புலமை யிலும் பாராட்டத்தக்க நற்குணங்களிலும் ஈடுபட்டு அவரைத் தம்முயிரினும் மேலாகக் கருதிவந்தான்.

## நெல்லிக்கனி தந்த வாழ்த்து

தகடூர் நாட்டு மலைப்பகுதியில் கருநெல்லி மரம் ஒன்று இருந்தது. அம் மரக் கனியை உண்பவர் நல்லுடல்பெற்று நீண்டநாள் இருப்பர் என்று பெரி யோர் கூறிவந்தனர். ஒருமுறை அதியமான் அக் கனி ஒன்றை அரிதின் முயன்று பெற்றான். அதன் சிறப்பினை நன்கு உணர்ந்திருந்தும் அதியமான் அதனை உண்ண விரும்பிலன்; ‘நம் தாய்மொழியை வளர்க்கும் நல்லிசைப் புலவராகிய ஔவைப் பெரு மாட்டியார் இதனை உண்டு நீண்டநாள் இருப்பின், நாட்டுக்கும் மொழிக்கும் நல்ல தொண்டு செய்யலாம். ஆதலின் யான் இக் கருநெல்லிக் கனியை அவருக்கே

கொடுப்பேன்,'' என்று தனக்குள் கூறி மகிழ்ந்தான். அப்பெருமான் அதன் சிறப்பினை விளக்கிக் கூருது, அதனை ஔவையாருக்கு ஈந்தான். அம்மையார் அது சாதாரண நெல்லிக்கனி எனக் கருதி உண்டார்; பின்னர் அதன் சிறப்பியல்பை உணர்ந்து, தான் அதனை உண்ணுது தமக்கீந்துவந்த அரசர் பெருமானது தியாகத்தை எண்ணி எண்ணி உள்ளம் குழைந்தார்; அப்பெரியோனை நோக்கி, "தேவரைக் காக்கத் தான் விடமுண்டு நீலகண்டனெனப் பெயர்பெற்ற சிவபிரானைப்போல நீ நிலமிசை நீடு வாழ்க,'' என உளமார வாழ்த்திஞர்.

## (2) ஔவையார் - அரசியல் தூதர்

**தொண்டைமான்**

இங்ஙனம் அறிஞர் போற்ற வாழ்ந்துவந்த அதியமானுக்கும் பகைவர் தோன்றலாயினர். அவருள் ஒருவன் காஞ்சியை ஆண்ட தொண்டைமான். தொண்டைமான் புதிய படைக்கலங்களைத் தயாரித்துக் கொட்டிலில் ஒழுங்குபெற வைத்திருந்தான். அவன் எக்காரணம் கொண்டோ, அதியமானைத் தாக்கத் தக்க வேளையை எதிர்பார்த்திருந்தான். இதனை ஒற்றரால் உணர்ந்த அதியமான் கடுஞ்சினம் கொண்டான்; எனினும், தன் உள்ளத்தெழுந்த அருள் உணர்ச்சியால் தொண்டைமானை நல்வழிக்குக் கொண்டுவர விரும்பிஞன்; அவன் நட்புடன் வாழ விரும்பவில்லை எனின், பின்னர்ப் போர் நிகழ்த்தி அவன் செருக்கை அடக்க உளங்கொண்டான்; தன் முடிபினைத் தன் அவைக்களப் புலவராய ஔவையாரிடம் கூறிஞன். ஔவையார்

அவனது கருத்தினைப் பாராட்டினார்; அதியமான் வேண்டுகோள்மீது தாமே அரசியல் தூதராகச் செல்ல இசைந்தார்.

## ஔவையார் - அரசியல் தூதர்

ஆழ்ந்து அகன்ற கல்வியறிவும் உலக அறிவும் அரசியல் அறிவும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற ஔவைப் பிராட்டியார் அதியமானிடமிருந்து தன்னிடம் அரசியல் தூதுவராக வருவதைக் காஞ்சி மன்னன் தனக்குண்டான தனிச் சிறப்பெனக் கருதினான்; ஔவைப் பிராட்டியாரைப் பெருஞ் சிறப்புடன் வரவேற்றான்; நல்விருந்து அளித்தான்; அவருக்குத் தன் அரண்மனையின் எல்லாப் பகுதிகளையும் காட்டினான். ஔவையார் புத்தர் காலமுதல் புகழ்பெற்று விளங்கிய "கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகரை"த் தம் இரு கண்களாலும் கண்டு களிப்புற்றார்.

தொண்டைமான் போர்க் கருவிகளை ஔவையாருக்குக் காட்ட விரும்பினான்; அவரை அக்கருவிகள் வைத்திருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றான்; ஔவையார் அவற்றைக்கண்டு தன் படைவன்மையை உணரவேண்டும் என்பது அவன் ஆவல். அவனது உள்ளக் கருத்தை நன்கு உணர்ந்தவர் ஔவையார். ஆதலால் அவர் அவனது படைக்கலக் கொட்டிலை நன்கு பார்வையிட்டார்; படைக்கலங்கள் அனைத்தும் புதியனவாக இருத்தலைப் பார்த்தார்; புன்னகை கொண்டார். அவர் தொண்டைமானை நோக்கி,

"புகழ் மிகுந்த காஞ்சி அரசனே, இப் போர்க் கருவிகள் அனைத்தும் புதியனவாகக் காண்கின்றன. இவை நெய் பூசப்பெற்று, மயிற்பீலி அணியப்பெற்

றுள்ளன; மிக்க காவலையுடைய கொட்டிலில் அழகுற வைக்கப்பட்டுள்ளன. ஆயின், எம்மரசனுடையவுள்ள அதியமானுடைய படைக்கலங்கள் போரில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டமையால் ஓரமும் நுனியும் தேய்ந்து, பழுது பார்க்கப்படக் கொல்லனது உலைக் கூடத்திற் குவிந்து கிடக்கின்றன,'' என்று அமைதியாகக் கூறினர். இதன் கருத்தென்ன?

'உன்னுடைய போர்க் கருவிகள் புதியன. அவற்றுள் போரில் ஒடிந்து புதுப்பிக்கப்பட்டது ஒன்றும் இல்லை. அவை செய்யப்பட்டனவே தவிர வேலையின்றி நெய் பூசப்பெற்றும் பீலி அணியப்பெற்றும் அலங்காரப் பொருள்களாக இருக்கின்றன. அஃதாவது, நீ ஒருமுறையேனும் போர் செய்ததில்லை. போர் அனுபவம் உனக்கில்லை. ஆயின், என் மன்னவன் ஓயாது போர் செய்யும் இயல்புடையவன்; ஆதலால் அவனுடைய போர்க் கருவிகள் அடிக்கடி பழுது பார்க்குமாறு கொல்லனது உலைக்களத்துக்கு அனுப்பப்படுகின்றன. அவன் போர் அனுபவம் மிக்கவன் என்பது இதிலிருந்து தெரிகிறதன்றோ? போர் அனுபவம் மிகுந்த அவனுடன் போர் அனுபவமே இல்லாத நீ போர்புரிய எண்ணுதல் தவறுனதன்றோ?' என்னும் விளக்கத்தை மேற்கூறப்பெற்ற ஒளவையாரது உரை தன்னகத்தே பெற்றுள்ளது.

இவ்வாறு கூறவேண்டும் பொருளை உய்த்துணர வைத்து, அவனைப் புகழ்வது போலப் பழித்தும், தன் அரசனைப் பழிப்பதுபோலப் புகழ்ந்தும் பேசிய பேச்சின் அருமையை எண்ணிப் பாருங்கள். இவ்வருமைப்பாடு நுண்ணறிவு உடையார்க்கே கைவரப் பெறுவதாகும். இத்திறமை உடையவர்களே அறிஞர் எனப் போற்றப் பெறுவர். இத்திறமை பெற்றிருந்

தமையாற்றான் ஒளவைப்பிராட்டியார் அதியமானால் தொண்டைமானிடம் அரசியல் தூதராக அனுப்பப் பட்டார். ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன் இத்தகைய அரசியல் அறிவு பெற்ற பெருமாட்டிகளைப் பெற்றிருந்த நாடு நமது தமிழ் நாடு என்பதைத் தமிழ் மாணவராகிய நீங்கள் அறிதல் நன்றன்றோ ?

## (3) நெடுஞ்செழியன்—இரும்பொறை போர்

### முன்னுரை

தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியருள் தமிழைப் பலர் அறியப் புலவர் அவையைக் கூட்டி வளர்த்துவந்தவர் பாண்டியரேயாவர். பாண்டியர் கடல் கொண்ட தென் மதுரையில் முதற் சங்கத்தைக் கூட்டித் தமிழ் வளர்த்தனர்; பிறகு கடல் கொண்ட கபாடபுரத்திற் சங்கம் கூட்டித் தமிழ் நூற்களைச் செய்வித்தனர்; பின்னர் இன்றைய மதுரையில் தமிழ்ச் சங்கத்தைக் கூட்டி, இன்றுள்ள புறநானூறு முதலிய நூல்களை செய்யக் காரணராயிருந்தனர் என்று வரலாறு கூறுகின்றது. அப் பெருமக்களுட் பலர் நிரம்பிய தமிழ்ப்புலமை பெற்றுக் கவிபாடும் வன்மை பெற்றிருந்தனர். பாண்டி மாதேவியார் ஒருவர் பாடிய பாட்டுப் புறநானூற்றில் சேர்க்கப் பட்டிருப்பதைக் காண, அக்கால அரச மாதேவியரும் தமிழறிவு பெற்றிருந்தனர் என்று நினைக்கலாம்.

### நெடுஞ்செழியன்

இங்ஙனம் தம் தலைநகரத்தில் சங்கம் வைத்துத் தமிழாராய்ந்த பாண்டியருள் புலமைபெற்றுக் கவி பாடிச் சிறந்தோர் சிலராவர். அவருள் பெருவீரனாக வும் சிறந்த ஒழுக்கமுள்ளவனாகவும் பெரும் புலவனாக

வும் விளக்கம் பெற்றவன் பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பவன். சங்ககாலச் சோழருள் கரிகாலனும் சேரருட் செங்குட்டுவனும் சிறந்து விளங்கினாற் போலச் சங்ககாலப் பாண்டியருள் இந் நெடுஞ்செழியன் சிறந்து விளங்கினான். ஆதலின் இவனுடைய நல்லியல்புகளை இங்குக் காண்டல் பொருத்தமேயாகும் அன்றோ?

நெடுஞ்செழியன் முத்தமிழ்த் துறையில் வித்தகன் ஆதலின் இயற்றமிழில் வல்ல புலவர்களையும் இசைத் தமிழில் வல்ல பாணரையும் நாடகத் தமிழில் வல்ல கூத்தரையும் நன்முறையில் ஆதரித்துவந்தான்; அவர்கள் விரும்பியவற்றை விரும்பியவாறே அளித்து வந்தான். இக் கொடைச் சிறப்பால் அவன் பெயரும் புகழும் முத்தமிழ் நாடுகளிலும் பரவின. அவன் வயதில் இளைஞனாயினும் உள்ளத்துணிபு கொண்ட வீரன் ஆதலின், தன் நால்வகைப் படைகளையும் நன்கு பெருக்கினான்; பொறாமைப் பேய் பிடித்த வேற்றரசர் தன்னை இளைஞன் எனக் கருதி எதிர்க்கக் கூடும் என்று கருதியே தன் படையைப் பலப் படுத்தினான்.

## பாண்டியன்—இரும்பொறை போர்

அவன் எதிர் நோக்கியபடியே போரும் உண்டானது. சேர நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்த யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பவன் பாண்டியன் புகழைக் கேட்க ஆற்றானாய்ப் படையெடுத்தான். பொறாமைக்கு ஆட்பட்ட காரணத்தால், அவன் எதிரியின் படைவன்மையை நன்கறியக் கூடவில்லை; அவன் வயதில் இளைஞன் ஆத

லின், எளிதில் வென்றுவிடலாம் என்று கருதினான். அவனது அறியாமைக்கு இரங்கிய பாண்டியன் அவனைப் போரில் கொல்லக் கருதவில்லை; அவனைச் சிறைப்படுத்தி, அவனுக்கு நல்லறிவு புகட்டவே விரும்பினான். அந்த நோக்கத்துடனே அவன் போருக்குப் புறப்பட்டான்; சேரனைக் கொல்லலாகாது எனத் தன் வீரர்க்குக் கட்டளையிட்டான்.

பொருமையால் உந்தப்பட்ட சேர வேந்தனுக்கும் தன் மானத்தைக் காக்க முற்பட்ட பாண்டியனுக்கும் போர் தொடங்கியது. சேர வீரர் சிறந்த வில்லாளிகள்; பாண்டிய வீரர் வேலையும் ஈட்டியையும் எறிவதில் வல்லவர்கள். இரு திறத்தினரும் கடுமையாகப் போரிட்டனர். தம் செங்கோல் வேந்தன் தோல்வியுறலாகாது, தம் தாய் நாடு பகைவர் கைக்குப் போகலாகாது என்னும் மனவுறுதி கொண்டு பாண்டிய வீரர் போரிட்டனர். ஆதலால், போரில் வெற்றிமேல் வெற்றி பெற்றனர். சேர வீரர் சிறிது சிறிதாகப் பின் வாங்கிச் சென்றனர். மான வீரனான நெடுஞ்செழியன் தன் வீரர்களை ஊக்கப்படுத்திக்கொண்டே பகைவர் கூட்டத்துட் புகுந்து வாட்போர் புரிந்தான்; சேர வீரர் பலரைத் தன் வாளுக்கு இரையாக்கினான். இறுதியிற் சேரவீரர் போர்க்களம் விட்டு ஓடலாயினர். சேர வேந்தன் சிறைப்பட்டான்.

## பாண்டியன் அறிவுரை

சிறைப்பட்ட சேரன் தன்னைப் போன்ற அரசன் என்பதைப் பாண்டியன் மறந்திலன். அவன் அருங்குணச் செல்வன் ஆதலின், சேரனை அரச மரியாதையுடன் தன் தலைநகரத்திற்கு அழைத்துச் சென்றான்; தன் விருந்தினனாக அவனை வைத்திருந்தான்.

புலவர்கள் பாண்டியனைப் பாராட்டினமையும் குடிகள் அவனைப் புகழ்ந்தமையும் அரசாங்க உயர் அலுவலர் அவன் ஆணையை மகிழ்ச்சியோடு நிறைவேற்றினமையும் அவனுடைய தனிப்பட்ட சிறப்பியல்புகளையும் சேரன் விழிகளாரக் கண்டு வியப்புற்றான்; அவன் பெயரும் புகழும் நாட்டிற் பரவக் காரணமாயிருந்த அவனுடைய அருங்குணங்களை அறிந்து பாராட்டினான். அத்தகைய சிறந்த பெரியோன்பால் பொறாமை கொண்டு படையெடுத்து வந்தது பெருந்தவறு என்பதை அவன் நன்கு உணர்ந்து வருந்தினான்; தோல்வியுற்ற தன்னையும் தன் நாட்டையும் பாண்டியன் அடிமைப்படுத்தக் கருதாது, தன்னை உரிமை வீரனாக நடத்தித் தன்னாட்டைத் தனக்கே அளித்த பெருந்தன்மையைப் பாராட்டி மகிழ்ந்தான்; தன் பாராட்டைப் பாண்டியனிடம் அறிவித்தான். பாண்டியன், "குடிகள் வாழ மன்னர் வாழவேண்டும்; தன் நாட்டை ஒவ்வொரு துறையிலும் எவ்வாறு முன்னேற்றுவது என்பதே அரசன் கவலையாகவும் முயற்சியாகவும் இருத்தல் வேண்டும். அம்மன்னனுக்கு அவன் குடிகளே கவசமாவர். அவன் எப்போரிலும் தோல்வியுறான். தன் நாடு காக்கும் பொறுப்புள்ள அரசனுக்கு வேற்றூர்மீது படையெடுக்க எண்ணம் வராது," என்று மலர் முகத்துடன் கூறினான். அவன் பொன்னுரையை ஏற்றுக்கொண்ட சேரன் அவனிடம் விடைபெற்றுத் தன்னாட்டை அடைந்தான்.

> "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்து விடல்"

என்னும் பொய்யா மொழிக்குப் பாண்டியன் செயல் ஏற்ற இலக்கியமாயிற்று அன்றோ?

## (4) தலையாலங்கானத்துப் பெரும்போர்

### சேர-சோழர் சூழ்ச்சி

பாண்டியன் நெடுஞ்செழியனிடம் இரும்பொறை தோற்றான் என்ற செய்தி சேரனையும் சோழனையும் திடுக்கிடச் செய்தது. இரும்பொறை தோற்ற செய்திபற்றித் தமிழ் மக்கள் பேசலாயினர்; பாண்டியன் சிறப்பினைப் பாராட்டிப் பேசினர். பாண்டியனைப் பற்றிய புகழ் மொழிகள் சோழ-சேரர் செவிகளைத் தூர்த்தன. அவ்விரு பெருவேந்தரும் ஒன்று கூடினர். "இரும்பொறையை வென்ற தைரியம் கொண்டு பாண்டியன் நம்மீது படையெடுப்பினும் எடுக்கலாம். நம் நாடுகளில் உள்ள மக்களும் அவன் புகழையே பாடுகின்றனர். அவன் படையெடுப்பானாயின், நம் மக்கள் எவ்வாறு நடந்து கொள்வர் என்பது திட்டமாகக் கூறுதற்கில்லை. ஆதலின், அவன் படையெடுக்குமுன் நாமே அவன் மீது படையெடுத்து, அவனது சிறப்பினை அழிப்பதே நன்று. அங்ஙனம் செய்யாவிடில், முடிவேந்தராகிய மூவருள் நாமிருவரும் தாழ வேண்டும் நிலைமை உண்டாகலாம். வெள்ளம் வருதற்குமுன் அணை போடுதலே அறிவுடைமை. ஆதலின் நாம் இருவரும் ஒன்றுபட்டுப் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தலே ஏற்ற செயல்......நம்முடன் நம் நண்பர்களான திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்னும் குறுநில மன்னர் ஐவரையும் சேர்த்துக்கொள்ளலாம். எழுவரும் சேர்ந்து எதிர்த்தால், பாண்டியன் ஒருவன் என்ன செய்வான்? அவன் படையை அழித்து, அவனையும் சிறைப்பிடித்து வெற்றிக் கொடி நாட்ட வேண்டும்.

நாம் அந்நிலையிற்றான் புகழ்பெற முடியும்,'' என்று சேரசோழ வேந்தர் இருவரும் தம்முள் முடிவு செய்தனர்; தமது முடிபைத் தம் தோழரான குறு நில மன்னர் ஐவர்க்கும் அறிவித்தனர். கெடுமதி கண்ணை மறைத்தது. இருபெரு வேந்தரும் ஐம்பெரு வேளிரும் தம் படைகளுடன் புறப்பட்டனர்; பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தனர்.

## பாண்டியன் சூளுரை

முடியுடை வேந்தர் இருவரும் குறுநிலமன்னர் ஐவரும் தன் நாடு நோக்கிப் படையெடுத்துவருதலை ஒற்றரால் அறிந்த நெடுஞ்செழியன் தன் கைகளைப் புடைத்து நகைத்தான்; சினத்தால் அவன் கண்கள் சிவந்தன. அப்பெருவீரன் தன் பேரவையில் இருந்த அமைச்சர், தானைத்தலைவர், மாங்குடி மருத னார் என்ற அவைப் பெரும்புலவர் முதலியோர் முன் னிலையில் நின்று,

"'பாண்டியன் ஆளும் நாட்டை மிகுத்துச் சொல்பவர் நம்மால் எள்ளி நகைக்கத்தக்கவராவர். பாண்டியன் அரசியல் அனுபவம் வாய்க்கப்பெறாத இளைஞன். நாங்களோ யானைப்படை, குதிரைப் படை, தேர்ப்படை, காலாட்படையாகிய நால்வகைப் படைகளையும் உடையோம்,' என்று என்னைப்பற்றி இழிவாகவும் தம்மைப்பற்றி மேன்மையாகவும் கூறிக் கொண்டு என் உயிரனைய பாண்டி நாட்டின்மீது படையெடுத்து வருகின்ற இருபெரு வேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் பொறுத்தற்கரிய போரின் கண்ணே சிதறப் பொருது வெற்றி காண்பேன். அங் ஙனம் நான் வெற்றி காணேனாயின், எனது வெண் கொற்றக் குடைநிழலில் வாழும் குடிகள், தாங்கள்

சென்றடையுந் நிழலைக் காணுது, 'கொடியன் எமது வேந்தன்' எனக் கருதிக் கண்ணீரைப் பரப்பிப் பழி தூற்றும் கொடுங்கோலன் ஆகுக! கல்வி கேள்வி களிற் சிறந்து மேம்பட்ட தலைமையையுடைய மாங் குடிமருதன் முதல்வனுக உலகத்தோடு நிலைபெற்ற பலரும் புகழும் தலைமையையுடைய புலவர் எனது நாட்டைப் பாடாதொழிவராகுக! வறுமையால் வாடும் என் சுற்றத்தவர்க்கு உதவி செய்ய முடியாத நிலையில் யான் வறுமை அடைவேனுகுக!" என்னும் கடுமை யான சூளுரை கொண்டான். இம்மூவகைச் சூளுரை யிலிருந்தும் அவன் குடிகளைப் பாதுகாக்கும் கொற்ற வன் என்பதும், தமிழ்ப் புலவர்கள்மீது பெருமதிப்புக் கொண்டவன் என்பதும், உற்றவரைக் காக்கும் தண் ணளி உடையவன் என்பதும் நன்கு தெளிவாதல் காணலாம்.

## பெரும்போர்

பாண்டியன் செய்த சூளுரை அவன் தானைத் தலைவர்களை நாட்டுப் பற்று மிகச் செய்தது. அவர் களால் தூண்டப் பெற்ற பாண்டி வீரர் கொதித் தெழுந்தனர். முன்னெச்சரிக்கையாகப் பாண்டியன் திரட்டி வைத்திருந்த பெரும்படையும் பழம்படை யுடன் சேர்ந்தது. "எழுவர் படைகளை வெற்றி கொண்டன்றி நாடு மீளோம்," எனப் பாண்டி வீரர் முழக்கமிட்டனர். மறக்குடி மகளிர் அவர்களை வாழ்த்தி வழியனுப்பினர். பாண்டியன் தனது பட் டத்தியானைமீது இவர்ந்து முன் சென்றுன். படை அவனுக்கு முன்னும் பின்னும் சென்றது.

பாண்டி நாட்டு எல்லையில் இருந்த பகைவர் படையும் கலித்தெழுந்தது. இருதிறத்தார் படை

களும் கைகலந்தன. கரியொடு கரி தாக்கியது; பரியொடு பரி போரிட்டது. தேரொடு தேர் முட்டியது; வீரரொடு வீரர் பொருதனர். எங்கும் பிணக்குவியல்கள் காணப்பட்டன. போர்க்களத்தில் குருதியாறு பெருக்கெடுத்தது. வெட்டுண்ட யானைகளின் உடலங்கள்மீது நின்று வீரர் வாட்போர் புரிந்தனர்; வெட்டுண்ட குதிரைகள் இரத்த ஆற்றுக்கு அங்கங்கே அமைந்த தடுப்புப் பலகைகள் போன்ற காட்சி அளித்தன. குடைகளும் கொடிகளும் இரத்த ஆற்றில் மிதந்து சென்றன. யமனும் விளித்தகண் இமையாது நோக்கும்படி பெரும்போர் காட்சி அளித்தது. பாண்டிய வீரர் தம் நாடு காக்க வீரவுணர்ச்சி கொண்டு போரிட்டமையால், பகைவர் பின்வாங்கினர்; வாள் வீரனை நெடுஞ்செழியன் யானைக் கூட்டத்துள் சிங்கம் பாய்வதைப்போலப் பகைவர் கூட்டத்துட் பாய்ந்து கலக்கினன். பகைவர் சோழ நாட்டுக்குள் புகுந்து ஓடினர். பாண்டியன் அவர்களை விடாது துரத்தினன். இருதிறத்தினரும் முடிவில் **தலையாலங்கானம்** * என்னும் இடத்திற் சந்தித்தனர். அங்கு நடந்த இறுதிப் போரில் பாண்டியன் வெற்றி பெற்றான்; பகைவர் உயிருக்கஞ்சி ஓடி ஒளிந்தனர்.

## அழியாப் புகழ்

பிள்ளையின் பாதுகாப்புக்கென அணியப்பட்ட ஐம்படைத் தாலியையும் கழற்றாத இளவயதினனை பாண்டியன்—நெடுஞ்செழியன் தன்னை ஒத்த இரு பெரு வேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் தான் தனியனாய் நின்று வெற்றி பெற்றது, அவனது போராற்

* இது திருவாரூர்க்கு எட்டுக்கல் வடக்கேயுள்ள இடம்; 'தலையாலங்காடு' என்று இப்பொழுது அழைக்கப்படுகிறது.

றலை—மனவுறுதியை—செங்கோற் சிறப்பைக் குன்றின் மீதிட்ட விளக்கெனக் காட்டுவதாகும். அப்பெரு வீரன் அவ்வெற்றிக்குப் பின் **தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்** என்று வழங்கப்பட்டான். அவனது பெருவெற்றி தமிழ் வரலாற்றில் என்றும் நிலைபெறுமாறு புலவர்கள் பாமாலை பாடியுள்ளனர். அப்பாடல்களைப் புற நானூற்றிற் கண்டு களிக்கலாம்.

## (5) ஆந்தையார் அன்னத்தைத் தூது விடுதல்

### பிசிர் ஆந்தையார்

சங்ககாலப் புலவருள் பிசிராந்தையார் என்பவர் ஒருவர். அவர் பாண்டிய நாட்டுப் ‘ பிசிர் ’ என்னும் ஊரைச் சேர்ந்தவர் ; ‘ ஆந்தை ’ என்பதை இயற் பெயராகப் பெற்றவர். அவர் உற்ற வயதில் நல்லாசிரி யரை அடுத்துத் தமிழ் இலக்கண—இலக்கியங்களைப் பழுதறப்படித்துப் புலமை பெற்றார் ; நற்குண நல் லொழுக்கங்களிற் சிறந்து விளங்கினார். அவர் பாண்டிய மன்னனையும் பாண்டி நாட்டுக் குறுநில மன்னரையும் கண்டு கவிபாடிப் பொருள் பெற்று வாழ்ந்துவந்தார். பாண்டியனும் பிறரும் அவ ருடைய கல்வி கேள்விகளிலும் உயர்ந்த குணங்களி லும் ஈடுபட்டு அவரை மிக்க மரியாதையுடன் நடத்தி வந்தனர்.

### கோப்பெருஞ்சோழன்

பிசிராந்தையார் பாண்டிய நாட்டில் வாழ்ந்த காலத்தில் கோப்பெருஞ்சோழன் என்பவன் சோணாட்டு மன்னனாக விளக்கமுற்றிருந்தான்.

அவன் பைந்தமிழைப் படித்துப் புலமை பெற்றவன்; நல்லிசைப் புலவர் பலரைத் தனக்குற்ற தோழராகக் கொண்டவன்; முத்தமிழிலும் வல்ல புலவர்களை மனமுவந்து ஆதரித்தவன்; ஒழுக்கத்தை விழுக்கல னுகக் கொண்டவன். அவன் தன் பெரும் பொழு தைப் புலவரிடையே தமிழின்பம் நுகர்வதிற் கழித்து வந்தான்.

## பழகா நட்பு

உறையூரில் இருந்த கோப்பெருஞ்சோழனுடைய உயர்ந்த பண்புகளைப் பாண்டிய நாட்டில் இருந்த பிசி ராந்தையார் புலவர்வாயிலாகக் கேள்வியுற்ருர்; தாம் அப்பெருமகனை உளமாரப் பாராட்டுவதாகப் புலவர் வாயிலாகச் செய்தி சொல்லி அனுப்பினுன்; அப் பெரியோனை நேரிற்கண்டு அளவளாவும் காலத்தை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். பிசி ராந்தையாருடைய உயரிய பண்புகளையும் முதிர்ந்த புலமையையும் தக்கார் வாயிலாக அறிந்த சோழ வேந்தனும் அவரை நேரிற்கண்டு பழக விரும்பினுன்; அவர் பாண்டிய நாட்டினராதலின், அவர் தன்னுடு வரும் நன்னுளை எதிர்பார்த்திருந்தான்.

பிசிராந்தையார் உள்ளத் தூய்மையுடைய பெரியார் ஆதலின் உள்ளத் தூய்மையுடைய சோழ னைப் பெரிதும் விரும்பினுர்; அவனைக் காணத் துடி துடித்தார். ஆயின், எக்காரணத்தாலோ அவர் சோழ நாடு செல்ல முடியாது தவித்தார்; எனினும் சோழ மன்னனைப் பற்றிய நினைவே அவர் உள்ளத் திற் குடிகொண்டிருந்தது.

## அன்னச் சேவலைத் தூது விடுதல்

புலவர் பிசிராந்தையார் ஒருநாள் கடலோரத்தில் உலவிக்கொண்டிருக்கையில், வடக்கு நோக்கிப் பறந்து செல்லும் அன்னச் சேவல் ஒன்றைக் கண்டார்; உடனே சோழன் நினைவு கொண்டார். அவர் அப்பறவையை நோக்கி, "அன்னச் சேவலே, நீ தென் திசையிலிருந்து குமரி முனையில் அயிரை மீனைத் தின்று வடதிசைச் செல்கின்றனை போலும்! உனக்குப் பயன் தரத்தக்க செய்தி ஒன்றைக் கூறுகின்றேன், கேள்: வடக்கே நீ செல்லும் வழியில் சோணாட்டின் தலைநகராகிய உறையூர் இருக்கின்றது. அந்நகரத்தின் நடுநாயகமாகச் சோழனது அரண்மனை வானுறவோங்கி வளம்பெற அமைந்துள்ளது. நீ அதன் மேன்மாடத்தில் தங்கு; தன் உயர்ந்த குணங்களால் என்உள்ளம் கவர்ந்த கள்வனை கோப்பெருஞ் சோழனைப் பார். அவன், 'நீ யார்?' என்று கேட்பான். 'நான் ஆந்தையின் அடியுறை' என்று பதில் கூறு. அப்பெருமான் உளம் மகிழ்ந்து நின் பெடை அணியத்தக்க அருங்கலம் நல்குவன். நின் மனம் மகிழும்," என்று, தம் மனம் மகிழக் கூறினர்.

இவ்வாறு பிசிராந்தையார் ஒருபால் சோழனைப் பற்றிய நினைவில் ஏக்கம் கொண்டு வாழ, சோணாட்டில் சோழ வேந்தன் அருங்குணச் செல்வராய ஆந்தையாரைக் காண அவாவிக் கவலை கொண்டிருந்தான்; தன்னிடம் வந்த பாண்டிநாட்டுப் புலவர் வாயிலாக அவரது நலனை அடிக்கடி விசாரித்துவந்தான். இது நிற்க.

## (6) பழகா நட்பு

**சோழன் வடக்கிருத்தல்**

குணங்களால் உயர்ந்த கோப்பெருஞ்சோழனுக்குக் குணங்களால் தாழ்ந்த மக்கள் இருவர் இருந்தனர். அவர்கள் தந்தையின் கொடைத் தன்மையை வெறுத்தனர்; அரச பண்டாரத்தைக் காக்கத் தந்தையை அரியணையிலிருந்து இறக்க முற்பட்டனர். அதனை உணர்ந்த வேந்தன் சினங்கொண்டு தன் மக்கள்மீது போருக்கெழுந்தான். அவ்வமயம் அவன் உயிருக்குயிரான புலவர் பெருமக்கள் குறுக்கிட்டு, அவனுக்கு அறிவுரை கூறுவாராயினர்.

"அரசர் பெருமானே, நின்னொடு பொரவந்தவர் வேப்பமாலை அணிந்த பாண்டியர் அல்லர்; பனம்பூமாலை அணிந்த சேரர் அல்லர். நின்மாலையும் ஆத்திமாலை; நின்னுடன் போர் புரிய வந்தவர் மாலையும் ஆத்திமாலை. நீ தந்தை; அவர் நின் மக்கள். நீங்கள் இருவீரும் ஒரு குடும்பத்தினர். அந்நிலையில் நீங்கள் நுமக்குள் பகைமை கொண்டு போரிடல் பொருத்தமன்று. போரில் நீ வெல்லுவையாயின், 'இளம் பிள்ளைகளைத் தந்தை வென்றது வியத்தற்குரியதோ?' என்று உலகம் நின்னை இகழும். நீ தோல்வியுறின், 'இளம் பிள்ளைகட்கு ஆற்ருத தந்தை ஒரு வீரனு!' என்று உலகம் நின்னை இழித்துரைக்கும். இவ்வாறு வென்ருலும் தோற்ருலும் உனக்கு வசையுண்டாகுமே அன்றி இசை உண்டாகாது. மேலும் குடும்பப்பூசல் அயல்நாட்டு அரசர்கட்கு வழி வகுத்தாற்போலாகும். சேர, பாண்டியர் எள்ளி நகையாடுவர். இதுகாறும் சோழர் மரபு நிலைநாட்டி வந்த நற்புகழ் இப்போராற் குன்றிவிடும். ஆதலின், போரை விடுத்தருள்க."

இந்த அறிவுரை அரசனது உள்ளத்தில் பசுமரத் தாணிபோலப் பதிந்தது. அவன் அரசுரிமையைத் தன் மக்களுக்கீந்தான்; வடக்கிருந்து (உண்ணா நோன்பை மேற்கொண்டு) உயிர்விடத் துணிந்து, ஆற்றிடைக்குறையில் மரநிழலில் தங்கினான். அவனுடன் ஒருயிரெனப் பழகிய புலவர் சிலர் அவனருகில் தாமும் வடக்கிருக்கலாயினர். இந்தப் பரிதாபக் காட்சியைக் காணப் பெருமக்கள் சிலர் வந்து, அரசனுடன் இருந்து, வேண்டிய உபசாரங்களைச் செய்து கொண்டிருந்தனர்.

**உள்ளுணர்ச்சி**

சோழ மன்னன் வடக்கிருக்கும் செய்தியைப் பிசிராந்தையார் எவ்வாறோ உணர்ந்தார். அவர் அம்புபட்ட மயில்போலத் துடித்தார்; "சோழ வேந்தனைக் காணவேண்டும் என்று பல நாட்களாக எண்ணமிட்டும் அவனைக் காண அமயம் வாய்க்க வில்லையே! அவன் முடிதுறந்து துறக்கம்புகத் தவம் கிடக்கும் இக்காலத்திலேனும் அவனைக் காணாதிருத்தல் தக்கதன்று. அவனைக்கண்டு தழுவாது என் உயிர் உடலில் தங்காது. நான் இக்கணமே அவனைக் காணச் செல்வேன்," என்று கூறித் தம் இல்லத்தாரிடம் விடைபெற்றுச் சோழநாடு நோக்கி ஓடினார்.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தான். அவனைச் சூழ அறிஞர் இருந்தனர். அரசன் அவர்களை நோக்கி, "மெய்யன்பினையுடைய அறிஞரே, பாண்டிய நாட்டில் பிசிர் என்னும் ஊரில் உள்ள ஆந்தையார் என்னும் புலவர் இங்கு என்னைக் காண வருவார். அவருக்கு இடம் ஒழித்துவையுங்கள்," என்று முக மலர்ச்சியுடன் கூறினான். அவன் கூற்றைக்கேட்ட

அறிஞர்கள், “ பெருமானே, நீ வடக்கிருக்கும் செய்தி அவருக்கு எப்படித் தெரியும் ? தெரியினும், அவர் பாண்டிய நாட்டிலிருந்து இங்கு வருதல் இயலுமா ?” என்று கேட்டனர். அரசன், “ அறிஞர்களே, உள் ளத்து உணர்ச்சி ஒன்றுபடின் உணரும் ஆற்றல் மிகும். அவ்வுணர்ச்சியின் மிகுதிறனுல் எனது துன்ப நிலையைப் பிசிராந்தையார் அறிதல்கூடும் ; அறிந்து, இங்கு வருதல்கூடும். யான் முடிமன்னனுக வாழ்ந்த இன்பக் காலத்தில் வாராதொழியினும், இன்னுமை மிக்க இக்காலத்தில் அவர் வந்தேதீருவர். உண்மை நண்பர்கள் துன்பக்காலத்திற் பிரியார். ஆதலால் அவர் இங்கு வருதல் உறுதி. நீங்கள் அவருக்கு இடம் ஒதுக்கிவையுங்கள்,” என்முன்.

இங்ஙனம் மன்னன் மலர்ந்த மாற்றம் பொய்க்க வில்லை. அவன் கூறியவாறே ஆந்தையார் அங்கு வந்தார். அவரே ஆந்தையார் என அறிந்தோர் கூறினர். சோழன் அன்புக் கண்ணீர் உகுத்துத் தன் உயிரனைய புலவரைத் தழுவிக்கொண்டான். இரு வரும் முன்னர் உள்ளத்தால் ஒன்றுபட்டிருந்தனரே யன்றி, ஒருவரை ஒருவர் கண்டிலர். இப்பொழுது ஒருவரை ஒருவர் நேரிற்கண்டு களித்தனர் ; மனங் கலந்து பேசி மகிழ்ந்தனர்.

முன்னர்க் காணுத ஒருவரை—பாண்டிய நாட் டில் இருந்த ஒருவரை, ‘ அவர் வருவார் ’ என்று கூறிய வேந்தனது உணர்ச்சி உரையும், அது பொய்க் காது வந்த புலவரது உள்ளுணர்ச்சியும் நினைக்க நினைக்க வியப்புண்டாகின்றதன்ருே ? அரசன் அரு கில் இருந்த சான்ருேர்கள் இந்த அதிசயத்தைக் கண்டு விழித்த கண் இமைக்காது நின்றனர். அவருள் ஒருவர், “ பொன் மண்ணிற் கிடைப்பது. முத்துக்

கடலிற் கிடைப்பது. பவளமும் கடலிற் கிடைப்பது. பிற உயர்ந்த மணிகள் வெவ்வேறு இடங்களிலிருந்து கிடைப்பன. ஆயினும், விலையுயர்ந்த நகைகள் செய்யும்பொழுது இவை அனைத்தும் ஒரிடத்தே கூடு கின்றன. இவைபோலவே, சான்றோர்கள் பல்வேறு நாடுகளிலோ ஊர்களிலோ இருந்தாலும், தக்க சமயத்தில் தம்மை ஒத்த சான்றோரையே சேருவர் என்பது, இப்புரவலன்—புலவர் உண்மை நட்பிலிருந்து விளக்கமாகிறது,'' என்று வியந்து கூறி மகிழ்ந்தார்.

## நரையின்மைக்குக் காரணம்

மற்றொரு சான்றோர் பிசிராந்தையாரைப் பார்த்து, ''புலவர் பெருமானே, யான் உம்மைப் பல ஆண்டு கட்குமுன் பாண்டிய நாட்டிற் பார்த்துளேன். நீவிர் அன்று பார்த்தாற்போல இன்றும் காணப்படுகிறீர். உமது தலை நரைத்திலது ; உடல்வளம் குறைந்திலது. இவ்வாறு நீர் மட்டும் என்றும் இளமையோடிருக்கக் காரணம் என்ன ? நாங்கள் அக்காரணத்தை அறிய விரும்புகிறோம். கூறியருளுக,'' என்று வேண்டினர்.

சோழ வேந்தனும் அக்காரணத்தை அறிய விரும்பினான். பிசிராந்தையார் நகைத்துக்கொண்டே அனைவரையும் பார்த்து, ''சான்றோர்களே, எனது நரையின்மைக்குரிய காரணங்கள் நான்கு: என் மனைவியும் மக்களும் நிரம்பிய அறிவுடையவர்கள் ; என் சொற்படி நடப்பவர்கள். இஃதொரு காரணம். என் வேலையாட்கள் என் ஏவற்படி நடப்பவர்கள் ; நம்பிக்கைக்கு உரியவர்கள் ; ஒழுக்க சீலர்கள். இஃதொரு காரணம். எம் நாட்டு வேந்தன், நல்லவை அல்லாத செயல்களைச் செய்யாதவன் ; குடிகளைத் தன் உயிரைப்போலப் பாதுகாப்பவன். இஃதொரு

காரணம். யான் வாழும் பிசிர் என்னும் ஊரில் ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்ருேர் பலராக வாழ்கின்றனர். இஃதொரு காரணம். இங்ஙனம் நாட்டையாளும் நல்வேந்தனுல் நாடு நன்னிலேயில் இருக்கிறது. யான் வாழும் ஊர் சான்ருேர் மிகுதி யால் நன்னிலேயில் விளங்குகிறது. என் வீடு நல்லற மனேவிமக்களாலும் வேலேயாட்களாலும் நன்னிலே யில் திகழ்கிறது. இந்நிலேயில் எனக்கு மனக்கவலே உண்டாக வழியில்லே. அதனுல் உடல்வளம் சுருங் கவோ, மயிர் நரைக்கவோ இடமில்லே,''

என்று தமக்கு நரையின்மைக்குரிய காரணங்களே மிகத் தெளிவாக விளக்கினுர். அவற்றைக்கேட்ட சோழனும் சான்ருேரும் அவர் கூற்றின் உண்மையை நினேந்து வியந்து பாராட்டினர்.

## உயிர்த்தியாகம்

இத்தகு பெரும்புலவர் உள்ளத்து உணர்ச்சி ஒன்றே கருதிச் சோழ வேந்தனேடு வடக்கிருந்து உயிர்நீத்தார் எனின், அப்பெருந்தகையாரது பெரு நட்பை என்னென்பது! இவ்வுயிர்த்தியாகத்தால், அவர்,

> " புணர்ச்சி பழகுதல் வேண்டா ; உணர்ச்சிதான்
> நட்பாங் கிழமை தரும் "

என்னும் திருக்குறளுக்குச் சிறந்த இலக்கியமாகப் பரிமேலழகராற் பாராட்டப்பெற்றனர். அவர் பெயர் இன்றளவும் அறிஞர் உள்ளத்தும் நூல்களிலும் நிலேத்து நிற்கின்றது.

# 9. சிலப்பதிகாரக் காட்சிகள்

## (1) கோவலன்—கண்ணகி திருமணம்

**காவிரிப்பூம்பட்டினம்**

ஏறத்தாழ ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன் சோழ நாட்டின் தலைநகராகக் காவிரிப்பூம்பட்டினம் சிறந்திருந்தது. அந்நகரம் அகநகர், புறநகர் என்னும் இரண்டு பிரிவுகளைப் பெற்றிருந்தது. அகநகர் நடுவில் மன்னன் மாளிகை நடுநாயகமாக விளங்கியது. அதனைச் சூழத் தேர்ப்பாகர், யானைப் பாகர், குதிரைப்பாகர், படைத்தலைவர், போர்வீரர்கள் விடுதிகளைக்கொண்ட தெருக்கள் திகழ்ந்தன. அந்தணர் வாழும் அகன்ற தெருக்கள், வணிகர்வாழும் வளமிக்க தெருக்கள், உழவர் வாழும் உணவுமிக்க தெருக்கள் இருந்தன. இவற்றுக்கு அப்பால் மருத்துவர், சோதிடர், சூதர், மாகதர், வைதாளிகர், முத்துக் கோப்பவர், நாடகமாதர், ஆடல் ஆசிரியர், இசை ஆசிரியர், நாடக ஆசிரியர் முதலியோர் வாழும் தெருக்கள் பல இருந்தன. இவற்றிற்கு இடையிடையே கோவில்கள் இருந்தன. அவை சிவன் கோவில், திருமால் கோவில், பலராமன் கோவில், இந்திரன் கோவில், முருகன் கோவில், கதிரவன் கோவில், தண்மதிக் கோவில், புத்தர் கோவில், அருகர் கோவில் முதலியன. அறச்சாலைகள், வேள்விச்சாலைகள், கல்விச்சாலைகள் இருந்தன. அயல் ஊராரும் நாட்டாரும் வந்து தங்குவதற்கு வசதியான மன்றங்கள் பல இருந்தன. நகரத்தார் பொழுதுபோக்க பல இனிய பூங்காக்கள் இருந்தன.

கடற்கரை ஓரத்தில் இருந்த நகரப் பிரிவு **புறநகர்**

எனப்பட்டது. அங்குக் கடற்கரை ஓரம் பெரிய மாளிகைகள் வானுற ஓங்கி வளம்பெற நிமிர்ந்து நின்றன. திசை மயங்கிச் செல்லும் கப்பல்களைக் கரைக்கு அழைக்கும் முறையில் கலங்கரை விளக்கம் அமைந்திருந்தது. பருத்திநூல், பட்டுநூல், ஆட்டு மயிர், எலிமயிர் என்பவற்ருல் பலவகை ஆடைகளை நெய்யும் சாலியர் தெருக்கள் இருந்தன. இரும்பு, வெண்கலம், பித்தளை, செம்பு, வெள்ளி முதலிய உலோகப் பொருள்களைக்கொண்டு தொழில் செய்பவர் வாழும் தெருக்கள் இருந்தன. ஓவியம் தீட்டுபவர், சிற்பவேலைக்காரர், கட்டட வேலைக்காரர், தையற்காரர், பாய் மிடைபவர், பந்தல் அலங்காரம் செய்பவர் முதலிய தொழிலாளர் வதியும் தெருக்கள் இருந்தன. வேருெருபால் பூவணிகர், இலைவணிகர், பிட்டு வணிகர், அப்பவணிகர், முத்துவணிகர், பவள வணிகர், மீன்வணிகர், கூலவணிகர் முதலியோர் வாழும் தெருக்கள் வளமுறத் திகழ்ந்தன. கடல் வாணிகத்துக்காகச் சீனர், அராபியர், ரோமர் முதலிய அயல்நாட்டார் வந்து தங்கியிருந்த வளமனைகளைக் கொண்ட தெருக்களும் இருந்தன.

இந்த இரண்டு நகரப் பிரிவுகட்கும் இடையே பெருங்கடைத்தெரு ஒன்று இருந்தது. அது **நாளங்காடி** எனப் பெயர்பெற்றது. அங்குச் சதுக்கப்பூதம் கோவில் ஒன்று இருந்தது.

துறைமுகம் மிகப் பெரியது. அங்கு மேலைநாட்டுக் கப்பல்கள் பலவகைக் கண்ணுடிப் பொருள்கள், யந்திரப் பொறிகள் முதலியவற்றையும், கீழைநாட்டுக் கப்பல்கள் பட்டாடைகள் முதலியவற்றையும் ஏற்றிக் கொண்டுவந்து இறக்குமதி செய்தன ; சோழநாட்டு அரிசி, ஆடை முதலிய பொருள்களை ஏற்றிக்கொண்டு

தத்தம் நாட்டுக்குச் சென்றன. ஏற்றுமதிக்குரிய பொருள்களைக் கணக்கிட்டுச் சோழர்தம் புலி இலச்சினை பொறிக்கவும், பண்டங்களைக் கப்பல்களில் ஏற்றவும் கப்பல்களிலிருந்து இறக்கவும் நூற்றுக் கணக்கான மக்கள் துறைமுகத் தொழிலாளராக இருந்தனர். சுங்கச்சாவடியும் அங்கு இருந்தது.

## இளங்கோக்கள்

இத்தகு சிறப்புடைய காவிரிப்பூம்பட்டினம் **புகார்** எனவும் **பூம்புகார்** எனவும் பிற பெயர்களையும் பெற்றிருந்தது. அந்நகரம் வாணிகத்திற் சிறந்து விளங்கியதால் அங்கு வாழ்ந்த வணிகர் செல்வவளத்திற் சிறந்திருந்தனர். அரசனுக்கு அடுத்த நிலையில் செல்வவான்கள் வணிகர்களே ஆதலின் அவர் 'இளங்கோக்கள்' எனப்பட்டனர். அத்தகைய செல்வச்சீமான்களில் **மாசாத்துவான்** ஒருவன்; **மா நாய்கன்** என்பவன் மற்றொருவன். இவ்விருவரும் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்; கடல் வாணிகத்திலும் கைதேர்ந்தவர். மாசாத்துவானுக்குக் **கோவலன்** எனப் பெயர்கொண்ட மைந்தன் ஒருவன் இருந்தான். மாநாய்கனுக்குக் கண்ணகி என்னும் நங்கை ஒருத்தி இருந்தாள்.

## கோவலன்-கண்ணகி

**கோவலன்** சிறந்த கல்விமான்; ஒழுக்க நெறி நடப்பவன்; அறநினைவு கொண்டவன்; ஆபத்திலிருந்து பிறரைக் காப்பவன்; சிறந்த கொடையாளி; இசை, நடனம் முதலிய கலைகளை அனுபவிக்கும் ஆற்றல் உடையவன். இப்பண்புகளால் அவன் பூம்புகார் அறிஞரால் மதிக்கப்பட்டான்.

**கண்ணகி** அழகிற் சிறந்தவள்; அரிய குணங்களிலும் உயர்ந்தவள்; பெண்களுக்குரிய அம்மனை, பந்தாட்டம், ஊசல் முதலிய விளையாட்டுக்களில் வல்லவள்; குழல்-யாழ் இவற்றைக் கையாளவும் இன்னிசையோடு பாடவும் பயின்றிருந்தாள்; தமிழ் நூல்களை நன்கு பயின்றவள். அவள் செல்வன் மகளாதலின் பணிப்பெண்கள் பலரைப் பெற்றிருந்தாள்; தோழியர் பலரும் அவளது நட்பை நாடினர்.

கண்ணகி மணப் பருவத்தை அடைந்த பிறகு அவளுடைய தோழியர் கோவலனுடைய சிறப்பியல்புகளை அடிக்கடிப் பேசுதல் வழக்கம். கண்ணகி அவற்றைக் கேட்டு மகிழ்ச்சியுற்று அச்சீரியோனையே மணக்க வேண்டும் என்று உறுதி கொண்டாள். கண்ணகியின் சிறந்த பண்புகளைத் தக்கார் வாயிலாகக் கோவலன் கேள்வியுற்றான்; அச்சிறப்புடை நங்கையையே தன் வாழ்க்கையின் விளக்காகக் கொள்ள விரும்பினான். அவ்விருவர் விருப்பத்தையும் குறிப்பால் உணர்ந்த பெற்றோர் அவ்விருவர்க்கும் மண முடிக்க முடிவு செய்தனர்; மணத்திற்குரிய நல்ல நாளைக் குறிப்பிட்டனர்.

## கோவலன்-கண்ணகி திருமணம்

திருமணத்திற்கு முன்னர்ப் பூம்புகார் வணிகர் முறைப்படி, வணிக மகளிர் யானைமீது அமர்ந்து வீடு வீடாகச் சென்று மணச் செய்தியை ஊரெங்கும் பரவச் செய்தனர். பிறகு மண நேரத்தில் முரசம் ஒலி செய்தது; மத்தளம் முதலிய வாத்தியங்கள் ஒலித்தன. வெண்குடைகள் எழுந்தன. மணப்பந்தர் சிறப்பாக அணி செய்யப்பெற்றிருந்தது. வயிரம் பதித்த தூண்களையும் நீலப்பட்டுக் கட்டப்பட்ட கூரையையும்

மா. ரா. அரசு
சென்னை - 6000

கொண்ட இடத்தில் முத்துப்பந்தர் அமைக்கப்பட்டிருந்தது. அப்பந்தலில் இருந்த இருக்கைகளில் மண மக்கள் மணக்கோலத்துடன் காணப்பட்டனர். அவர் கட்குப் பின்புறம் உற்ருர் உறவினர் குழுமி இருந்த னர்.

குறித்த நல்லோரையில் வயதிலும் சாத்திர அறி விலும் ஒழுக்கத்திலும் சிறந்த பிராமணன் மணச் சடங்குகளை ஒன்றன் பின் ஒன்ருகச் செய்யலாஞன். மணமக்கள் தீ வலம் செய்தனர். பெண்மணிகள் பலர் மணச் சடங்குகட்கு வேண்டிய மலர்களையும் மணப்பொருள்களையும் விளக்குகளையும் பிறவற்றை யும் ஏந்தி நின்றனர். மக்களைப் பெற்ற வாழ்வரசியர் பலர், “கணவனும் மனைவியும் நிறைந்த அன்புடன் நீடு வாழ்க,” என்று மணமக்கள்மீது மலர்களைத் தூவி வாழ்த்தினர்.

மணவினை முற்றுப் பெற்ற பிறகு அக்கால வழக் கப்படி நாடாளும் வேந்தனுக்கு வாழ்த்துக் கூறப் பட்டது. மணத்திற்கு வந்திருந்தார் அனைவரும், “சோழர் பெருமாஞன கரிகாலன் இமயத்தில் இருத் திய புலி இலச்சினை அவ்விடத்தில் நிலைபெற்றிருப் பதாகுக! அவனது ஒப்பற்ற அரசாட்சி வாழ்வ தாகுக!” என்று மனமார-வாயார வாழ்த்தினர்.

## (2) கோவலன்-கண்ணகி மண வாழ்க்கை

### காதலன்-காதலி தனி வாழ்க்கை

கோவலனுடைய பெற்ருேர், திருமணத்திற்குப் பிறகு மணமக்களைத் தனி வாழ்க்கை வாழ விட்டனர். அவர்கட்காகத் தனி மாளிகை ஒன்று விடப்பட்டது. கண்ணகிக்குத் தோழியர் சிலர் அமர்த்தப்பட்டனர்.

அவர்களுக்கென விடப்பட்ட தனி மாளிகை இரண்டு அடுக்கு மாடி. மூன்றும் தளத்தில் காயும் நிலா வெளிச் சத்திற் கண்ணகி தன் தோழியரோடு இருந்து ஆடிப் பாடிப் பொழுது போக்கினுள்; பகற் காலத்தில் அவர் களுடன் அம்மனை-பந்தாட்டம்-ஊசல் முதலிய ஆட் டங்களில் ஈடுபட்டாள்; கோவலன் விரும்பிய போதெல்லாம் அவனுடன் இருந்து இசைக் கருவிகளை மீட்டி அவனை இன்புறுத்தினுள்.

இக்கால மகளிருட் சிலர் செல்வர் குடும்பத்தின ராயின், தம் கணவரை மதிப்பதில்லை; கணவர் செல்வ ராயினும் தாய் வீட்டுப் பணச் செருக்கால் கணவரை மதியாது நடப்பர். இத் தருக்கினுல் கணவர் மனைவி யர்க்குள் பிணக்கும் பூசலும் ஏற்படும். இப்பூசல் ஓர் எல்லையைக் கடக்குமாயின், மனைவிக்குத் தனி வாழ்க்கை ஏற்படும். அவள் தன் தாய் வீட்டுக்குச் சென்றுவிடுவாள். ‘இவள் கணவனிடம் வாழாதாள்’ எனக் காண்போர் அவளை இகழ்ந்துரைப்பர். நிறைந்த செல்வமுடையார் வீட்டு மகளாயினும் கண வனைத் துணையெனக் கருதி அவனுடன் ஒன்றுபட்டு வாழாதவளது வாழ்க்கை தாய் வீட்டுச் செல்வத்தாற் சிறப்புருது; கணவன் வீட்டுப் பணத்தாலும் மதிப் புப் பெருது. கணவனேடு கருத்து ஒருமித்து வாழும் இல்லற வாழ்க்கையே அவளை உள்ளபடி வாழ்விக்கும் உயரிய வாழ்க்கையாகும்.

இதனைக் கல்வி கேள்விகளாலும் செல்வத்தாலும் சிறந்திருந்த கண்ணகி நன்கு உணர்ந்திருந்தாள். ஆதலின் அவள் கணவனைத் தன் உயிரெனக் கருதி ஞள்; அவனை மகிழ்விப்பதையே தன் கடமையாக எண்ணினுள்; அவனது உள்ளக் குறிப்பை உணர்ந்து செயலாற்றினுள்; அவன் விரும்புமாறு அறு சுவை

உண்டி அகங்குழைய அருத்திளுள்; அவன் கண்டு மகிழத் தன்னை ஆடை அணிகளால் அழகு செய்து கொண்டாள்; அவன் இல்லாத பொழுது அவள் தன்னை அழகு படுத்திக்கொள்வதில்லை. இங்ஙனம் குணங்களால் உயர்ந்த அவ்வுத்தமியிடம் கோவலன் உண்மையன்புடன் ஒழுகிவந்தான்.

### கோவலன் பாராட்டுரை

கண்ணகி யாழ் வாசித்தலில் வல்லவள். அவளை யாழ் வாசிக்கச் செய்து பாடக் கேட்பதில் கோவலனுக்கு விருப்பம் மிகுதி. அவன் தானும் யாழ் வாசித்துப் பாடுவான். குரல், துத்தம், கைக்கிளை, இளி, உழை, விளரி, தாரம் என்னும் ஏழிசைகளிலும் இருவரும் வல்லுநராயிருந்தனர். யாழோசையும் கண்ணகியின் குரலோசையும் ஒன்றுபட்டுக் கோவலனைப் பரவசப்படுத்தும். கோவலன் யாழ் இசைத்துப் பாடுங்கால் கண்ணகி தன்னை மறந்து இசை இன்பத்தில் ஈடுபட்டிருப்பாள்.

இங்ஙனம் காதலர் கருத்தும் செயலும் ஒன்றுபட்டு வாழ்ந்தனர். கோவலன் கண்ணகியின் நல்லியல்புகளை எண்ணியெண்ணி உள்ளம் பூரித்தான்; தன்னை மகிழ்விப்பதையே தன் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட கண்ணகியின் கற்புநெறியைப் பாராட்டினான். அவனது பாராட்டு அவனது உள்ளத்தில் அடக்க முடியாத நிலையை அடைந்தபோது ஒரு நாள் அவளை எதிரில் இருத்தி வெளிப்படையாகப் பாராட்டினான்.

“மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே

பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழிருங் கூந்தல் தையால் நின்னை.''

இவ்வரிகளைக் கொண்டு கோவலன் கண்ணகியை எவ்வளவு மதித்திருந்தான் என்பதை வெள்ளிடை மலை போல் விளக்கமாக அறியலாம். உணர்ச்சி ஒத்த காதல் வாழ்க்கைக்குக் கோவலன்-கண்ணகி வாழ்க்கையையே ஏற்ற இலக்கியமாகும்.

## (3) கணவன்—மனைவி கலந்துரையாடல்

### மதுரைக்குச் செல்லல்

கண்ணகியுடன் இன்ப வாழ்வில் ஈடுபட்டிருந்த கோவலன், மாதவி என்னும் நாடக மகளுடைய ஆடல் பாடல்களில் ஈடுபட்டுக் கண்ணகியை மறந்து, அந்நாடக மகளுடன் வாழ்வானாயினன்; தன் செல்வத்தை அவளுக்கு அளித்தனன்; பிறகு அவளிடம் வெறுப்புக் கொண்டு, கண்ணகியை அடைந்து, தான் செய்த தவற்றுக்காக வருந்தினன்; மதுரைக்குச் சென்று வாணிகம் செய்ய விரும்பினன். அதற்கு முதலாகத் தன் காற் சிலம்பொன்றைத் தருவதாகக் கண்ணகி இசைந்தாள். இருவரும் ஒருவருக்கும் அறிவியாமல் காவிரிப்பூம்பட்டினத்தை விட்டுப் புறப்பட்டு மதுரை நோக்கிச் சென்றனர்; வழியில் கவுந்தியடிகள் என்ற சமணப் பெண் துறவியார் அருள்பெற்றனர். அவ்வடிகளும் மதுரை செல்ல விரும்பி, அவர்களுக்குத் துணையாகச் சென்றார். கால் கடுக்க நடந்தறியாத கண்ணகி காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மதுரைவரை கால்கள்

கொப்புளிக்க நடந்தாள். துரோகம் செய்த தனக்குத் தன் நகையையும் கொடுத்துத் தன்னுடன் கால் கடுக்க நடந்துவந்த தன் மனைவியின் மாண்பைக் கோவலன் எண்ணி எண்ணிக் கண்ணீர் உகுத்தான்.

**மதுரையில் மாதரி இல்லம்**

கவுந்தியடிகள் மதுரையில் இருந்த மாதரி என்னும் இடைக்குல மங்கைபால் கண்ணகியை ஒப்புவித்தார். அம்மங்கை நல்லாள் கண்ணகியைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்; தனியிடம் உதவினாள்; சமையலுக்கு வேண்டும் பாண்டங்களையும் பலாக்காய், வெள்ளரிக்காய், கொம்மட்டி மாதுளையின் இளங்காய், வாழைக்கனி, மாங்கனி, செந்நெல் அரிசி ஆகியவற்றையும் வாங்கிக் கொடுத்தாள்; தன் வீட்டில் இருந்த பாலையும் தயிரையும் வேண்டுமளவு தந்தாள்.

கண்ணகி மாதரி கொடுத்த காய்களைத் தன் மலர்க் கைகள் சிவக்கும்படி அரிவாளால் அரிந்து, முகம் வியர்க்க, செவ்வரி பொருந்திய கண்கள் சிவக்கத் தன் கைவன்மை தோன்றச் சமைத்தாள். பனையோலையால் செய்யப்பட்ட தவிசில் கோவலன் அமர்ந்தான். சுட்ட மண்கலம் கொண்டு காதலன் அடிகளைக் கழுவிய நீரை மலர் போலும் அங்கையால் வணங்கிக் கண்ணகி மாற்றினாள்; நிலமடந்தையின் மயக்கத்தை ஒழிப்பவள் போலத் தரையைத் தன் கையால் தண்ணீர் தெளித்து மெழுகி, ஈருதை வாழையின் குருத்தினை விரித்து அதன்கண் உணவினைப் படைத்து, "அடிகாள், இவ்விடத்து உண்டருள்க," என்று கூறினாள். கோவலன் அமுதுண்ணலானான்.

அப்பொழுது மாதரியும் அவள் மகளாகிய

ஐயையும் கோவலனையும் கண்ணகியையும் கண் களாரக் கண்டு களித்தனர் ; " இம்மதுரைக்கண் ஆயர்பாடியில் நல்ல அமுதினையுண்ணும் நம்பியாகிய கோவலன், அம் மதுரைக்கண் ஆயர்பாடியில் அசோதை என்பாள் பெற்றெடுத்த அந்த நல்லமுது உண்ணும் புதிய காயாம்பூப் போலும் நிறத்தினை யுடைய கண்ணனே ! இவன் துயரத்தைத் தீர்த்த இந்நங்கை, முன்னர் நம் குலத்துத் தோன்றிய தூய நீலமணி போலும் நிறமுடைய மாயோனைக் காளிந்தியாற்றின்கண் துயர் தீர்த்த நப்பின்னை என்னும் விளக்கோ !" என்று வியந்து பாராட்டி மகிழ்ந்தனர்.

## பாராட்டுரை

கோவலன் உணவுண்டு மகிழ்ந்து இருக்கையில், கண்ணகி அழகிய மெல்லிய வெற்றிலையையும் பாக்கினையும் கோவலற்கு அளித்தாள். கண்ணகியின் காற்சிலம்பு ஒன்றை எடுத்து விற்றுவர மதுரைக்குட் செல்லும் நோக்கத்துடன் இருந்த கோவலன் தாம்பூலம் தரித்துக்கொண்டான் ; தன் மனைவியின் அரிய பண்புகளை நினைந்து அகங்குழைந்தான் ; அவளுக்குத் தன் உணர்ச்சியை வெளிபபடுத்த விரும்பினான் ; அவளைத் தன் அருகில் அழைத்து அவளது மதிமுகத்தைக் குளிர நோக்கி,

" மடந்தையின் மெல்லிய அடிகள் பருக்கைக் கற்கள் நிறைந்த நெறியாகிய அருவழியைக் கடப்பதற்குச் சிறிதாவது வன்மையுடையனவோ என்று நினைந்து, வெம்மையையுடைய மறவர் ஆறலைக்கும் முனைகளையுடைய அரிய சுரத்து நெறியிற் போந்

தமைக்கு இரக்கம் கொண்டு எம்முடைய இருமுது குரவரும் எந்நிலையை அடைந்தனரோ! யான் இங்ஙனம் உற்றது கனவோ! நனவோ! நனவாயின், முன் செய்த தீவினையின் பயனே! இப்பொழுது என் உள்ளம் கலக்கமுறலால், யான் இவற்றில் ஒன்றையும் உணர்கின்றிலேன். பயனில சொல்லாரோடும் இருந்த வருடனும் கூடிப் பொருள் பொதிந்த உரையினை யுடைய பெரியோர் விரும்புகின்ற நல்லொழுக்கத் தினைக் கெடுத்த எனக்கு இனித் தீக்கதி அன்றி நற்கதி உண்டாகுமோ? யான் தாய் தந்தையர்க்கு ஏவல் செய்தலிலும் வழுவினேன்; சிறிய பருவத்தில் பெரிய அறிவினையுடைய நினக்கும் தீமை செய்தேன். இங்ஙனம் நம் நகர்விட்டு இங்கு வருதல் முற்றமுடைத்தாம் என்பதனைச் சிறிதும் எண்ணிப் பாராமல் நமது பெரிய நகரத்தினிடமிருந்து இவ்விடத்துக்கு 'எழுக' என்று யான் கூறியவுடன் மனமுவந்து எழுந்தனை; என்னுடன் அரும்பாடு பட்டு அரிய வழியைக் கடந்தாய். என்ன காரியம் செய்தனை!" என்று இரங்கிக் கூறினன்.

கண்ணகி தன் மலர்வாய் திறந்து, "அற வோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவோர்க்கு எதிர்தலும் விருந்தினரை எதிர்கொள்ளு தலும் ஆகிய இவற்றை இழந்த என்னை நும் பெற்றோர் வந்து காண்பர். நான் நுமது பிரிவால் உண்டாகிய வருத்தத்தை மறைத்து முகமலர்ச்சி கொண்டவள் போல இருந்து அவர்களுடன் பேசு வேன். அவர்கள் உள்ளம் கனிந்து என்னைப் பாராட்டுவர்; எனினும் உமது செயலுக்கு வருந்துவர். யான் உம்முடைய சொல்லைச் சிறிதும் மாற்ற நினையாத உள்ளத்தினள் ஆதலின், எவரிடத்தும்

கூறுது உம்மொடு எழுந்து வந்தேன்,'' என்று மலர் முகத்துடன் கிளிமொழி போலப் பேசினாள்.

**பிரியா விடை**

அவளது அமுத மொழியைக் கேட்ட கோவலன் உள்ளங் குழைந்து, ''பெற்றோரையும் குற்றேவல் புரியும் மகளிரையும் தோழியரையும் பிறரையும் விட்டு விலகி, நாணினையும் மடனையும் நல்லோர்கள் போற்றும் கற்பினையும் சிறந்த துணையாகக் கொண்டு இவ்விடத்து என்னோடு வந்து எனது துன்பத்தினைக் கெடுத்த பொன்னே, கொடியே, புனைபூங்கோதாய், நாணினையுடைய பாவை போன்றவளே, பெரிய இவ்வுலகிற்கு விளக்கமாக அமைந்தவளே, கற்புக் கொழுந்து போன்றவளே, அழகின் செல்வியே, நின் சிலம்பு ஒன்றைக் கொண்டுசென்று விற்றுவருவேன்; வருந்துணையும் மயங்காதிருப்பாயாக,'' என்று சொல்லி அவளை உளமுருக நோக்கினான்; அவளைத் தனியே விட்டுச் செல்ல நேர்ந்த நிலையை எண்ணினான்; அவ்வளவில் கண்ணீர் வெளிப் பட்டது. கோவலன் அதை மறைத்து, அவளிடம் விடைபெற்றுச் சிலம்பு விற்கச் சென்றான்.

## (4) கோவலன் கொலையுண்ணல்

**அரண்மனைப் பொற்கொல்லன்**

கோவலன் கடைவீதிக்குச் சென்றபொழுது, உருக்குத் தட்டாரும் கைத்தொழிலில் தேர்ந்த நுட்ப வினைத் திறமுடைய பணித்தட்டாரும் நூறு பெயர் தன் பின்னே வரச் சட்டையணிந்து அரண்மனைப் பொற்கொல்லன் எதிரே வந்தான். கோவலன் அவனை

அணுகி, "அரசன் பெருந்தேவிக்கு அணியத்தக்க காற்சிலம்பினை நீ விலைமதிக்கவல்லையோ"? என்று கேட்டான். பொற்கொல்லன் கையால் தொழுது, "யான் அரசர்க்கு முடி முதலிய கலன்கள் சமைப்பவன்," என்று பதில் கூறினான். அவ்வளவில் கோவலன் கண்ணகியின் சிலம்பை அவனுக்குக் காட்டினான். பொற்கொல்லன், பாண்டி மாதேவியின் சிலம்பொன்றைக் கவர்ந்துகொண்டவன் ஆதலின், தன் செயல் வெளிப்படுமுன், அரிய வேலைப்பாடமைந்த கண்ணகி சிலம்பைப் பாண்டி மாதேவியின் சிலம்பெனவும், அதனைக் கோவலன் களவாடினான் எனவும் பாண்டியனிடம் கூறித் தான் தப்பித்துக் கொள்ள விரும்பினான்; விரும்பி, நான் இச்சிலம்பினைப்பற்றி அரசற்கு அறிவித்து வரும்வரை இங்கு இருக்க," எனக் கூறி, ஓரிடத்தில் அவனை இருக்கச் செய்து, அரண்மனையை நோக்கி நடந்தான்.

## பாண்டியன் தவறு

பொற்கொல்லன் அரண்மனையுட் சென்ற பொழுது, அரசன் கோப்பெருந் தேவியின் ஊடலைத் தீர்க்க அந்தப்புரம் நோக்கி விரைந்து வந்துகொண்டிருந்தான். பொற்கொல்லன் அவனைப் பணிந்து, "அரசமாதேவியின் காணமற்போன சிலம்பு அகப்பட்டுவிட்டது. அதனைக் கவர்ந்த கள்வன் நமது நகரத்திலேயே விற்கத் துணிந்துவந்துள்ளான்," என்றான். காணமற் போன சிலம்பு அகப்படின், தேவியின் ஊடல் தீரப் பெருந்துணை புரியும் என்று எண்ணிய வேந்தன், ஆய்ந்து ஓய்ந்து பாராமல் ஏவலரை அழைத்து, "இவன் காட்டும் கள்வனிடம் சிலம்பு இருக்குமாயின், அவனைக் கொல்ல அச்சிலம்

போடு அழைத்து வருக,'' என்று கூற வாயெடுத்த வன், அறிவிழந்து வாய்குழறி, '' அவனைக் கொன்று சிலம்பைக் கொணர்க,'' என்று கட்டளையிட்டான்.

அரண்மனை ஏவலர் பொற்கொல்லனுடன் சென்று கோவலனைக் கண்டனர்; அவனது கம்பீரத் தோற் றமும் மாசற்ற முகமும் கண்டு அவன் கள்வன் அல்லன் என்று முடிவு செய்தனர்; பொற்கொல்லன் அவர்கள் மனத்தைக் குழப்பி, ''களவுத் தொழிலிற் சிறந்தவர் இவனைப்போலத்தான் இருப்பர்,'' எனக் கூறினன். உடனே அரண்மனை ஏவலருள் அறிவற்ற ஒருவன், '' நாம் அரசனது ஆணைப்படி செய்வோம் '' என்று கூறிக் கோவலனைத் தன் கைவாளால் வெட் டினன். அந்தோ! ஒரு குற்றமும் அறியாத கோவலன் அரசனது அறியாமைக்குப் பலியானன்.

## (5) கண்ணகி வழக்குரைத்தல்

### கண்ணகியின் துன்பக் கொடுமை

ஆயர் மகள் ஒருத்தி கோவலன் கொல்லப்பட்ட தைக் கண்டு ஆயர்பாடிக்கு வந்தாள்; பலரிடம் இது பற்றிக் கூறினள்; ஆயர்பாடியில் அபசகுணங்கள் தோன்றின. ஆயர் மகளிர் கண்ணபிரானைத் தோத் தரித்துக் குரவையாடினர். கண்ணகி தன் கணவற்கு உற்றதைக் கேட்டறிந்தாள்; உடனே பொங்கி எழுந் தாள்; தன்வசமிழந்து நிலத்தில் மயங்கி வீழ்ந்தாள்; கார்மேகம் போன்ற அவளது கூந்தல் மண்ணிற் புரண்டது. மயக்கம் தெளிந்த பின்னர், அவள் தன் கணவன் கள்வன் என்று கருதப்பட்டதை எண்ணிக் கண்சிவந்தாள்; மதுரைமாநகர வீதிகளிற் புலம்பிக் கொண்டே சுற்றி அலைந்தாள். அவள் புலம்பலைக்

கேட்ட மாநகரத்து மாதர் கண்ணீர் வடித்தனர்; "வளையாத செங்கோல் வளைந்ததே!" என மனம் பதறினர். கண்ணகி இறுதியில் கொலைக்களத்தைக் குறுகினாள்; தன் உயிரனையான் உடல் குருதி வெள்ளத்தில் படிந்திருக்கக் கண்டாள்; பதை பதைத்தாள். அவளது துன்பக் காட்சியைக் காணப் பொருத கதிரவன் மேற்றிசையில் மறைந்தான். அதனால் எங்கும் இருள் சூழத் தலைப்பட்டது. கண்ணகி தன் கணவனது உடலைத் தழுவிப் புலம்பினாள். கோவலன் உயிர்பெற்று, அவள் கண்ணீரைத் துடைத்து, "நீ இங்கு இருப்பாயாக," எனக் கூறிப் பிணமானான். கண்ணகி, "பாண்டியனைப் பழிவாங்குவேன்," எனக் கூறி, அரண்மனை நோக்கி நடந்தாள்.

## கண்ணகி வழக்குரைத்தல்

கண்ணகி தன் கையில் ஒற்றைச் சிலம்புடனும் அவிழ்ந்து சோர்ந்த கூந்தலுடனும் விழிநீர்வார வீராவேசங்கொண்டு பாண்டியன் அரண்மனையை அடைந்தாள். அவ்வமயம் அரசமாதேவி தான் கண்ட தீக்கனா விவரங்களை அரசனிடம் அச்சத்துடன் கூறிக் கொண்டிருந்தாள். அப்பொழுது வாயிற்காவலன் காட்டக் கண்ணகி அரசன் எதிரில் வந்துநின்றாள். பாண்டியன் அவளை நோக்கி, "நீ யார்?" என்றான். கண்ணகி, "ஆராய்ச்சி அறிவற்ற அரசனே, ஒரு புறவினுக்காகத் தன் உயிர் கொடுத்த சிபியும், ஒரு பசுக்கன்றுக்காகத் தன் தனி மகனைத் தேர்க்காலில் இட்டுத் கொன்ற மனுச்சோழனும் ஆண்ட பூம்புகார் எனது பிறப்பிடம் ஆகும். அப்பதியிலுள்ள பெரு வணிகனான மாசாத்து வாணிகனுக்கு மகன்

கோவலன். அவனே என் கணவன்; இன்று உன்னால் கொல்லப்பட்டவன்,'' என்று அடங்காச் சீற்றத்துடன் கூறினாள்.

பாண்டியன், "அம்மையே, கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று'' என்றான். கண்ணகி சினந்து, "என்கணவன் கள்வனல்லன்; என் காற்சிலம்பை விற்று இத் தொல்பதியில் தங்கி வாணிகம் புரிய விழைந்தான். பிறர் பேச்சைக் கேட்டு அவனைக் கள்வன் எனக் கருதிக் கொல்லச் செய்தனை. இதோ, பார், எனது மற்றொரு சிலம்பு. இதன் உள்ளிருப்பது மாணிக்கப் பரல். நீ அவனிடம் இருந்து கைப்பற்றிய சிலம்பை எடு. உன் சிலம்பையும் அத்துடன் ஒத்திட்டுப் பார்,'' என்றாள். "அரண்மனைச் சிலம்பு முத்துப் பரலை உடையது'' என்றான் அரசன். உடனே கண்ணகி தன் சிலம்பை உடைத்தாள். அதிலிருந்து மாணிக்கக் கற்கள் வெளிப்பட்டன. அவற்றுள் ஒன்று அரசன் வாயிற்றெறித்தது. பாண்டியன் அப்பொழுதுதான் உண்மையை உணர்ந்தான்; "சிறிதும் ஆராயாது பொற்கொல்லன் பேச்சைக் கேட்டுக் குற்றமற்ற ஒருவனைக் கொல்லச் செய்து, இவ் இளநங்கையின் வாழ்க்கையைக் கெடுத்தேனே! செங்கோலிலிருந்து வழுவாத பாண்டிய அரசுக்கு என்னால் மாசுண்டானதே! என் ஆயுள் கெடுவதாக!'' என்று கூறிக்கொண்டே மன்னன் அரியணையிலிருந்து சாய்ந்தான்; பிணமானான். கோப்பெருந்தேவி குலைந்து நடுங்கிக் கணவனருகில் மயக்கமுற்று வீழ்ந்தாள்.

**கண்ணகி வஞ்சினம்**

"குற்றமற்ற என் கணவனைக் கொன்ற பாண்டியன் அழிந்தான். அவனுடைய கோநகரம் அழியட்டும். இதில் வாழும் பத்தினிமார், அந்தணப் பெருமக்கள், குழந்தைகள் முதலிய குற்றமற்றோரைத் தீ நெருங்காதாகுக. அது தீத்திறத்தார் பக்கமே சேர்க," எனக் கூறித் தன் இடப்பக்க மார்பை வலக்கையால் திருகினாள்; நகரத்தை மும்முறை வலம் வந்தாள்; திருகிய மார்பை வட்டித்து எறிந்தாள். உடனே மதுரை தீப்பற்றிக்கொண்டது.

**கண்ணகி விண்ணகம் புகுதல்**

செய்வகை அறியாத கண்ணகி மதுரைக் கோட்டையின் மேற்கு வாயிலை அடைந்தாள்; அங்கிருந்த துர்க்கையின் திருமுன் தன் கைவளையல்களை உடைத்து வைகையாற்றங்கரை வழியே மேற்கு நோக்கி நடந்தாள்; மலைநாட்டை அடைந்தாள்; கணவனை இழந்த பதினான்காம்நாள் ஒரு வேங்கை மரத்தடியில் சோக முகத்துடன் நின்றாள். அப்பொழுது அங்கு வாழ்ந்த மலைவாணர்கள் காண, விண்ணிலிருந்து விமானம் ஒன்று வந்தது. அதிலிருந்து கோவலன் தோன்றினான். கண்ணகி அவனுடன் விண்ணகம் புக்கனள்.

## (6) செங்குட்டுவன் மலைவளம் காணல்

**சேரன் செங்குட்டுவன்**

கண்ணகி-கோவலன் வாழ்ந்த காலத்தில் சேர நாட்டை ஆண்டுவந்தவன் **செங்குட்டுவன்** என்பவன். அவன் கங்கர், கொங்கர், கொங்கணர் முதலிய

பல நாட்டரசரை வென்று தென் இந்தியாவிற் பெரு வீரனாக விளக்கமுற்றிருந்தான். அவனது பெயர் இமய முதல் குமரிவரை பரவியிருந்தது. அவனுடைய கோப்பெருந்தேவி **இளங்கோவேண்மாள்** என்பவள். அப் பெருமாட்டி கல்வி, கேள்விகளிற் சிறந்தவள்; தன் கணவனுடன் இருந்து அரச காரியங்களில் யோசனை கூறும் ஆற்றல் வாய்ந்தவள். அரசனுக்குத் தம்பியார் **இளங்கோவடிகள்** என்பவர். அவர் சமணத் துறவியார்; தமிழ் இலக்கண-இலக்கியங்களில் துறை போயவர்; பெரும் புலவர். மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்பவர் மேற்சொன்ன மூவர்க்கும் நண்பர்; பௌத்த சமயத்தினர். அவர் அடிக்கடி சேர வேந்தனைக் கண்டு செல்வது வழக்கம்.

### பத்தினிச் செய்தியை அறிதல்

ஒரு நாள் செங்குட்டுவன் மலைவளங் காணத் தன் தம்பியார், மாதேவி, தானைத் தலைவர், அமைச்சர் முதலியவருடன் கண்ணகி விண்ணகம் புக்க மலைப்பாங்கர் சென்று தங்கினான். தம் வேந்தர் பெருமான் வந்து தங்கியிருத்தலை அறிந்த மலை வாழ் மக்கள் அகில், சந்தனம் முதலிய மணப் பொருள்களையும் மலையில் விளையும் பலவகைப் பழங்களையும் கிழங்குகளையும் எடுத்துக்கொண்டு சென்று, தங்கள் அரசர் பெருந்தகையைக் கண்டு பணிந்தனர். மன்னன் அவர்களை மகிழ்ந்து நோக்கி, "உங்கள் மலை நாட்டில் குறிப்பிடத் தக்க சிறப்பு ஏதேனும் உண்டோ?" என்று கேட்டான். மலைவாணர் கண்ணகி விண்ணகம் புகுந்த அற்புதச் செய்தியை விரித்துரைத்தனர்.

சேரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. சேரமா தேவி மலைவாணர் கூற்றைக் கேட்டு வியப்புற்றாள். இளங்கோ அடிகள், "அப்பெண்மணி யார்?" என்று தமக்குள் கேட்டுக்கொண்டார். சாத்தனார் புன்முறுவலுடன், "அவள் வரலாற்றை யான் அறிவேன்", என்று கூறி, கண்ணகி வரலாற்றை விளங்கவுரைத்தார்.

## சேரமாதேவி யோசனை

கண்ணகி வரலாற்றை விளக்கமாகக் கேட்ட சேர வேந்தன் தன் மாதேவியை நோக்கி, "பொற்கொல்லன் பேச்சை ஆராயாது நம்பியதால் பாண்டியன் செங்கோல் வளைந்தது; ஆயின் அவன் தன் தவற்றை உணர்ந்தவுடன் உயிர் விட்டதால், வளைந்த செங்கோல் நிமிர்ந்தது. அவன் கோப்பெருந்தேவி அறக்கற்புடையவள்; கண்ணகி மறக் கற்புடையவள்," என்று கூறி, "கணவன் இறந்தவுடன் தன்னுயிர் விட்ட பாண்டிமாதேவி நம்மால் போற்றத் தக்கவளா? வீர பத்தினியாகிய கண்ணகி போற்றத் தக்கவளா?" என்று கேட்டான். அறிவிற் சிறந்த சேரமாதேவி கணவனை நோக்கி, "இருவரும் சிறந்த பத்தினிகளே. எனினும், நம் அகல்நாடு அடைந்து விண்ணகம் புகுந்த பத்தினியை நாம் வணங்குதல் வேண்டும்," என்றாள்.

## வடநாடு செல்ல யோசனை

உடனே சேர வேந்தன் பத்தினிக்குக் கோவில் கட்டத் துணிந்தான்; அவளது உருவம் பொறிக்கத் தக்க சிலையை எங்கிருந்து கொண்டுவருவது என்பது பற்றி யோசித்தான். பொதிய மலையிலிருந்து சிலை

யைக் கொண்டு வருவதினும் இமயத்திலிருந்து கொண்டு வருதலே தனது வீரத்திற்கேற்றது எனக் கருதினான்; மேலும் உத்தர கோசலத்து அரசரான கனக விசயர் என்பார், "நாம் இல்லாத காலத்தில் சேரன் இமயம்வரை வந்ததாகக் கேள்வியுற்றோம். நாம் அரசராக இருக்கும் இப்பொழுது அவன் வரட்டும் பார்ப்போம்," என்று முழக்கமிட்டதைச் சேரன் கேள்வியுற்றுச் சினங் கொண்டவன் ஆதலின், இமயம் செல்வதென்று துணிந்தான்.

## (7) சேரனது வடநாட்டு யாத்திரை

**வடநாட்டு யாத்திரை**

எண்ணியது முடிக்கும் ஆற்றல் வாய்ந்த சேரர் பெருமான் குறித்த நாளில்-குறித்த நல்லோரையில் தன் பெரும்படையுடன் வஞ்சி மாநகரத்தை விட்டு வடக்கு நோக்கிச் சென்றான். நகர மக்கள் அவனை வாழ்த்தி வழிவிட்டனர். அவன் சென்ற வழி நெடுக இருந்த சேர நாட்டார், "எம் அரசன் வெற்றி பெற்று மீள்வானாக," என்று வாழ்த்துக் கூறினர். படை வீரர் போர்ப் பண்களைப் பாடிக்கொண்டு வழி நடந்தனர். சேரர் பெருமான் நீலகிரி யடிவாரத்தில் தங்கி இளைப்பாறினான். அங்கு அவன் தங்கப்போவதை முன்னரே அறிந்த சுற்றுப்புற நாடுகளைச் சேர்ந்த அரசர்கள், தம் உயர் அலுவலர் மூலமாக விலையுயர்ந்த பலவகைப் பொருள்களைப் பரிசளித்து மகிழ்ந்தனர். பல நாட்டு ஆடல்-பாடல்களில் வல்ல ஆடவரும் பெண்டிரும் சேரர் பெருமானைக் கண்டு ஆடல்-பாடல்களைப் புரிந்து பரிசு பெற்றுச் சென்றனர்.

சேரனுக்கு நட்பரசரான **நூற்றுவர் கன்னர்**

அனுப்பிய சஞ்சயன் என்ற தூதுவர்தலைவன் பல வரிசைப் பொருள்களுடன் சேரர் பெருமானைக் கண்டான் ; தன் படைகள் கங்கையைக் கடத்தற்கு ஏற்ற மரக்கலங்களைத் தயார் செய்து வைக்கும்படி சேரன் சஞ்சயன் மூலமாக நூற்றுவர் கன்னர்க்கு வேண்டுகோள் விடுத்தான்.

## கனக-விசயர் சிறைப்படல்

செங்குட்டுவன் நீலகிரியை விட்டுப் புறப்பட்டு வடக்கு நோக்கிச் சென்றான் ; நூற்றுவர் கன்னர் தயாரித்து வைத்திருந்த மரக்கலங்களைச் செலுத்திக் கங்கையின் அக்கரையை அடைந்து வட கோசலத்தில் தங்கினான். வட கோசலத்திற்றான் சேரனை இழித்துரைத்த கனக-விசயர் இருந்தனர். அவர்கள் சேரனது வருகையை உணர்ந்து முன்னரே அரசர் பலரைக் கூட்டிப் படை திரட்டி யிருந்தனர் ; அதனால் சேரன் எதிர்பார்த்தபடியே வந்து தாக்கினர். அவர்களது தாக்குதலை வரவேற்ற சேரன் தன் பெரும் படையுடன் போர்க்களம் புகுந்தான் ; சிறந்த வில்லாளிகளான சேர வீரர் மானவுணர்ச்சி கொண்டு "தமிழர் ஆற்றலைக் காட்டுதும்" என்று கூறிக் கொண்டு போரிட்டனர். சேரன் யானைக் கூட்டத்துள் சிங்கம் பாய்வதைப் போலப் பகைவர் படை நடுவிற் பாய்ந்து வாட் போர் புரிந்தான். போர் பதினெட்டு நாழிகையளவில் முடிவுற்றது. கனக-விசயர் சிறைப்பட்டனர் ; சேரர் பெருமான் வாகை சூடினான்.

## வஞ்சி மீளுதல்

உத்திர கோசலப் போர் முடிவுற்ற பின்னர்ச் சேரன் விருப்பப்படி, சிற்ப வல்லுநர் படை வீரருடன்

இமயமலையடிவாரம் சென்றனர்; பத்தினியின் உருவம் பொறித்தற்குரிய கல்லைத் தேர்ந்தெடுத்துக் கொணர்ந்தனர்; அதனைக் கங்கை நீரில் நீராட்டித் தூய்மைப்படுத்தினர். சேரர் பெருமான் அக்கல்லைக் கனக-விசயர் முடிமீதேற்றி வஞ்சி நோக்கித் திரும்பினான். சேரனது வட நாட்டு யாத்திரை முப்பத்திரண்டு மாதங்கள் ஆனது. சேரனது வெற்றி பொருந்திய மீட்சியைச் சேர நாட்டார் சிறப்புறக் கொண்டாடினர்; வஞ்சி மாநகரத்தார் கோநகரை அலங்கரித்துத் தம் அரசனை மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

## (8) பத்தினி வழிபாடு

**கண்ணகிக்குக் கோவில்**

வீரபத்தினியாகிய கண்ணகி வந்து நின்ற மலையருகில் கோவில் கட்டப்பட்டது. இமயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கல்லில் சாத்தனார் வருணித்தபடியே கண்ணகியின் திருவுருவம் செதுக்கப்பட்டது. கல்லின் அடிப்பகுதியில் அவளது பெயரும் வரலாற்றுக் குறிப்பும் பொறிக்கப்பட்டன. பின்னர் அச்சிலை விதிப்படி நீராட்டிப் பூசை செய்து கோவில் கருவறையில் நாட்டப்பெற்றது. பிறகு பத்தினிக்குச் செய்யப்படவேண்டிய பூசனைகள் முறைப்படி நடைபெற்றன. சேர வேந்தன் அழைப்பை ஏற்று அவ்விழாவிற்குக் கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் மாளுவ வேந்தரும் பிற அரசர்களும் வந்திருந்தனர்.

கண்ணகியின் உயிர்த் தோழியான தேவந்தி, மாதரி மகளான ஐயை என்பவர் பத்தினியைப் புகழ்ந்து பாடினர். அப்பொழுது விண்ணில் பளிச்

சென்று ஓர் உருவம் தோன்றியது. அது கைகளில் வளையல்களும் கழுத்தில் மாலைகளும் காதுகளில் தோடுகளும் அணிந்திருந்தது. அவ்வுருவம், "தோழி களே, யான் இம் மலையில் விளையாடல் புரிவேன். என் கணவனைக் கொல்வித்த பாண்டியன் குற்ற முடையவன் அல்லன். அவன் விண்ணகத்தில் இன் புற்றிருக்கிறான். நான் அவன் மகள். எனக்குச் சிறப்புச் செய்த செங்குட்டுவன் வாழ்க!" என்று வாழ்த்தி மறைந்தது.

பின்னர்த் தேவந்தி முதலியோர் கண்ணகித் தெய்வத்தைப் பல பாக்களால் துதித்தனர். கயவாகு முதலிய அயல் நாட்டு மன்னர்கள் பத்தினிக் கடவுளைப் பணிந்து, "அம்மையே, நீ இச் சேர நாட்டில் எழுந்தருளியிருத்தல் போலவே, எங்கள் நாடுகளிலும் எழுந்தருளி எங்கட்கு ஆசி நல்குதல் வேண்டும்," என்று வேண்டினர். அவ்வமயம், "தந்தேன் வரம்," என்று ஒரு குரல் விண்ணிடை எழுந்தது. செங்குட்டுவன் கட்டுவித்த பத்தினிக் கோவிலில் தேவந்தி என்ற பார்ப்பனத் தோழி இருந்து பூசை செய்துவரலானாள்.

கயவாகு வேந்தன் இலங்கையில் பத்தினிக்கு ஒரு கோவில் கட்டினான்; பூசை, விழா முதலியன குறைவற நடைபெறும்பொருட்டு நிலங்களை மானிய மாக விட்டான். அவனைப் போலவே மாளுவ வேந்தர் தம் நாட்டிலும் பத்தினிக்குக் கோவில் எடுப்பித்தனர். இங்ஙனம் அரசர் பலரும் தத்தம் நாடுகளில் கோவில் கள் கட்டுவித்தனர். இச் சிறப்புடைச் செயலால் கண்ணகி 'பத்தினிக் கடவுள்' எனப் பல நாடு களிலும் வழிபடப்பட்டாள். கனகவிசயரும் பத்தி னியைப் பணிந்து தாய்நாடு மீண்டனர்.

## காவியம் கொண்ட கற்பரசி

ஆண்டுகள் சில கழிந்தன. கண்ணகி விழாவிற் கலந்துகொண்டவருட் குறிப்பிடத் தக்கவர் இருவர். ஒருவர் இளங்கோவடிகள் ; மற்றவர் சாத்தனூர். இவ் விருவரும் காவியம் பாடவல்லவர். சாத்தனூர் கோவ லனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலை வரலாற் றைக் கூர்ந்து விசாரித்தார். அவளும் அவள் தாயும் பௌத்த பிக்ஷுணிகள் ஆயினதையும், மணிமேகலை பல நாடுகள் சுற்றினமையும், உயிர்களை உணவளித் துக் காத்தமையும் வல்லார்வாய்க் கேட்டுணர்ந்தார் ; அவர் பௌத்தரானதால் பௌத்த பிக்ஷுணியான மணிமேகலை வரலாற்றை ஒரு காவியமாகப் பாடத் துணிந்தார் ; கண்ணகி வரலாற்றை ஒரு காவியமாகப் பாடுமாறு இளங்கோவடிகளை வேண்டினூர்.

மாதங்கள் பல கழிந்தன. கற்பரசியைப் பற்றிய காவியம் பாடி முடிக்கப் பெற்றது. அது செங் குட்டுவன் திருமுன் மதுரைக் கூல வாணிகன் சாத்தனூர் தலைமையிற் கூடிய புலவர் அவையில் அரங்கேற்றப்பெற்றது. அக்காவியம் சிலம்பு காரண மாக வளர்ந்த வரலாற்றைக் கூறுவது ஆதலின் **சிலப் பதிகாரம்** எனப் பெயர் பெற்றது. அது முப்பது பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொரு பிரிவும் ஒரு ‘ காதை ’ எனப்படும். கண்ணகி வரலாறு மூன்று பெரும்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. புகார் நகரத்திற் பிறந்த கண்ணகி மதுரைக்குச் சென்ற வரை நடந்த வரலாறு **புகார்க் காண்டம்** என்னும் பிரிவிற் கூறப்பெற்றது ; மதுரையடைந்த கண்ணகி கணவனை இழந்து மதுரையைக் கடந்தவரை நடந்த நிகழ்ச்சிகள் **மதுரைக் காண்டம்** என்னும் இரண்

டாம் பிரிவிற் கூறப்பெற்றன. பின்னர்ச் சேர நாட்டில் நடைபெற்ற கண்ணகி பற்றிய நிகழ்ச்சிகள் **வஞ்சிக் காண்டம்** என்னும் மூன்றும் பிரிவிற் கூறப்பெற்றன.

## சிலப்பதிகாரச் சிறப்பு

சிலப்பதிகார காவியம் இங்ஙனம் மூன்று தமிழ் நாடுகளைப் பற்றிக் கூறுகிறது; மூன்று தலை நகரங் களைப் பற்றிப் பேசுகிறது; முடியுடை மூவேந்தர் ஆட்சி, வீரம், முதலியன பற்றிக் கூறுகிறது; தமிழ் நாட்டு ஐவகை நிலங்களைப் பற்றிய விளக்கங்களைத் தெரிவிக்கிறது; அவ்வந் நிலமக்களுடைய இயல்பு களை விளக்குகிறது; ஆடல்-பாடல் வகைகளைக் குறிக்கிறது. ஆசிரியர் காவியத்தை இயல்-இசை-நாடகம் என்னும் முத்தமிழும் விரவச் செய்துள்ளமை அதன் சிறப்பை மிகுவிப்பதாகும். அதனால் அந்நூல் **முத்தமிழ்க் காவியம்** என்று போற்றப்படுகின்றது. சுருங்கக் கூறின், சங்ககாலத் தமிழகத்தின் நீர்வளம்-நிலவளம்-அரசர்தம் ஆட்சி முறை-சமயம்-கலைகள்-வாணிகம்-கைத்தொழில்-முத்தமிழ் வளர்ச்சி-மக்கள் வாழ்க்கை-உயரிய பண்புகள் முதலியவற்றைத் தெளி வாக அறிவிக்கும் ஒப்பற்ற நூல் சிலப்பதிகாரம் என்னல் தவருகாது. இப்பெருநூல் நமது செல்வமா யமைந்தது, நாம் செய்த பேறேயாகும். இதனை நன்கு கற்றுப் பயனடைதல் தமிழராகிய உங்கள் கடமையாகும்.

# 10. மணிமேகலைக் காட்சிகள்

## (1) மணிமேகலை மலர்வனம் புகுதல்

### புகார் நகரில் மலர் வனங்கள்

கோவலன் மதுரையிற் கொல்லப்பட்டதும் கண்ணகி மதுரையை அழித்து மண்ணகம் நீத்த செய்தியும் கேள்வியுற்ற மாதவி தன் ஆடல்-பாடல்களை ஒழித்துப் பௌத்த பிக்ஷுணி ஆயினள். மணப்பருவத்தை அடைந்த அவள் மகளான **மணிமேகலையும்** தாயைப் பின்தொடர்ந்தாள்...ஒரு நாள் மாதவி மணிமேகலையை மலர்வனம் சென்று மாலை தொடுத்தற்கு மலர்களைப் பறித்துவருமாறு ஏவினள்.

அப்பொழுது சுதமதி என்ற பார்ப்பனத் தோழி மாதவியை நோக்கி, "உற்ற வயதடைந்த பெண்களைத் தனியே செல்லவிடுதல் நன்றன்று. இக்காவிரிப் பூம் பட்டினத்தில் மலர்வனங்கள் பல இருக்கின்றன. இலவந்திகைச் சோலைக்குச் செல்லின், அரசனுடைய பக்கத்திலுள்ளார் அங்கு இருப்பர். உய்யானவனத்தில் தேவர்களால் அன்றி மனிதரால் விரும்பப்படாதனவும் வண்டுகள் மொய்க்காதனவும் ஆகிய மலர்களையுடைய மரங்கள் எல்லாம் வாடாத பூமாலைகளைத் தாங்கியிருத்தலால், 'இவ்வனம் பாசக்கயிற்றையுடைய பூதங்களாற் காக்கப்படுவது' என்று எண்ணி அறிவுடையோர் அங்குச் செல்லார். கதிரவன் சுடுகிரணங்களால் சிறையிழந்த சம்பாதி இருந்த சம்பாதி வனமும், காவிரியின் தந்தையாகிய கவேரன் தவம் செய்துவந்த கவேரவனமும் மிக்க முதுமை உடையனவும் தீண்டி வருத்துவனவும் ஆகிய தெய்வங்களாற் காக்கப்படுவன; ஆதலின் அறிவுடையோர் அவ்வனங்களில் மலர் பறிக்கச் செல்லார்.

**உவவனச் சிறப்பு**

"அருளே உருவான புத்தபகவானது ஆணையால் பல மரங்களும் நிரம்பப் பூக்கும் உவவனம் அழகு மிக்கது. அவ்வனத்தில் பளிங்கினால் ஆகிய மண்டபம் ஒன்று இருக்கிறது. அது தன்னகத்துள்ளோரது ஓசையை வெளிப்படுத்தாமல் அவர்தம் உருவங்களை மட்டும் வெளிப்படுத்தவல்லது. அதனுள் மாணிக்கச் சோதி பரந்த பதுமபீடம் ஒன்று இருக்கின்றது.

"அப்பீடத்தில் இடப்பெறின் அரும்புகள் மலரும். பல ஆண்டுகள் ஆயினும் அப்பீடத்தில் இடப்பெற்ற மலர்கள் வாடா. அம்மலர்களில் வண்டுகள் மொய்யா. ஒரு தெய்வத்தை நினைந்தோர் அத்தெய்வத்தின் அடிகளைத் தொழுது மலர்களை அப்பீடத்தில் சேர்ப்பின், அம்மலர்கள் அப்பீடத்திலிருந்து நீங்கி அத்தெய்வத்தின் அடிகளிடம் செல்லும்; ஒரு நினைப்பும் இன்றி அம்மலர்களை அப்பீடத்திற் சேர்ப்பின், அவை அதனை விட்டு நீங்கா. இந்நிலைக்குக் காரணம் என்ன? 'செய்யும் செயல்கள் மனத்தோடு கூடாத விடத்தும் பலிக்கும்' என்னும் விரதிகள் துன்பமுறவும், 'மனத்தோடு கூடாத வழிச் செயல்கள் பலியா' என்போர்க்கு எடுத்துக்காட்டாகவும் மலரை இட்டுக் காட்ட மயன் என்னும் தெய்வத் தச்சனால் அப்பீடம் அமைக்கப்பட்டதாகும். உன் மகளான மணிமேகலை அவ்வனத்திலன்றி வேறு வனங்களிற் செல்லுதற்கு உரியவள் அல்லள். அவளுக்குத் துணையாக நானும் மலர்வனம் செல்வேன்," என்று கூறினாள். பின்னர் மணிமேகலையும் சுதமதியும் உவவனம் நோக்கிச் சென்றனர்.

## தெருவிற் கண்ட காட்சிகள் : களிமகன் செயல்

ஒரு தெருவில் உறியிலே வைத்த குண்டிகை உடையவனும் நுண்ணிதாய்த் திரண்ட பிரம்பினை உடையவனும் அருகன் கோட்டத்தில் உள்ளவனும் நாணத்தையும் ஆடையையும் அறவே அகற்றியவனு மான சமணத்துறவி ஒருவன் நடந்து சென்றான். அவன் கண்களாற் காண இயலாத சிற்றுயிர்க்கும் நடத்தல் முதலிய தன் தொழில்களால் துன்பம் உண்டாகுமோ எனச் செயலற்று ஏங்கி, உண்ணு விரதத்துடன் வருந்துதலையுடைய யானையைப் போல வழி நடந்துவந்தான். அவன் கழுவாத மேனியை உடையவன். அவனைக் கண்ட கட்குடியன் ஒருவன், "எம்முடைய பெருமானே, அடியேன் உரைப்பதைக் கேளும்: அழுக்குச் செறிந்த உடம்பிற் புகுந்த உம் முடைய உயிர் புழுக்கத்தினைத் தரும் அறையில் அகப் பட்டோரைப்போல உள்ளம் வருந்தாதபடி, எமது தலைவர் உரைத்ததாகிய இம்மை இன்பத்தையும் மறுமை இன்பத்தினையும் முடிவில்லாத முத்தியையும் தன்னிடத்திருந்து தரவல்ல தென்னையில் விளைகின்ற இனிய மதுவினை உண்க. இதில் கொலை என்பதும் உண்டோ ? உண்மைத் தவமுடைய அடிகளே, இதனை உண்டு தெளிவு பெற்று, இத்தவநெறியில் இதனினும் மேலான பயனைக்கண்டால், மதுவையேயன்றி எம்மை யும் அகற்றிவிடும்," என்று கூறி, அச்சமண முனிவ னுடன் சென்று, "உண்ணும்" என்று கள்ளேந்தி நின்று இரந்தான். பாதையிற் போவாரும் வருவாரும் அக் களிமகன் பின் நீன்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர்.

## பித்தன் செயல்

ஒருவன் வேறொரு தெருவில் நின்றுகொண்டிருந்தான். அவன் அலரிப்பூ நெருக்கமாகக் கட்டப்பட்ட மாலையை உடையவன்; எருக்கமாலையை அணிந்தவன்; கட்டிய கந்தலில் சுள்ளிகளை ஒடித்துக் கட்டிக் கொண்டவன்; வெண்ணீறும் சந்தனமும் உடல் முழுவதும் பூசிக்கொண்டவன்; பயனற்ற சொற்களைப் பலரோடும் கூறினான்; அழுதான்; விழுந்தான்; அரற்றினான்; கூவினான்; தொழுதான்; எழுந்தான்; சுற்றிவந்தான்; ஓடினான்; ஒருபக்கம் ஒதுங்கினான்; நெடிது நின்றான்; தன் நிழலுடன் பகைமை கொண்டு நின்றான்; பித்துற்ற அவனுடைய செயல்களைக் கண்டு மக்கள் இரக்கம்கொண்டு அவனைச் சூழ்ந்து நின்றனர்.

## பேடிக் கூத்து

மேற்செல்லப்பட்ட வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டே சுதமதியும் மணிமேகலையும் வழி நடந்தனர். மற்றொரு தெருவில் சுருண்ட தாடியும், இருண்ட அழகிய கூந்தலும், பவளம் போன்ற சிவந்த வாயும், வெண்மை ஒளி வீசும் பற்களும், ஒளி பொருந்திய செவ்வரி படர்ந்த கண்களும், வெள்ளைச் சங்கினாற் செய்த காதணிகளும், பிறை போன்ற நெற்றியும், காந்தள் மலர் போன்ற சிவந்த கையும், அழகிய நுண்ணிய இடையும், முழுந்தாள் அளவு உடுக்கப்பட்ட உடையும் உடைய பேடி -வேடத்தில் ஒருவன் தோன்றினான். அவன், வாணன் என்ற அசுரனது 'சோ' நகரத்தின் தெருவில் நின்று திருமாலின் மகனான காமன் முன்னொரு காலத்தில் ஆடிய 'பேடு' என்னும் கூத்தை ஆடிக்கொண்டிருந்

தான்., திரளான மக்கள் அக்கூத்தைக் கவனித்துக் கொண்டிருந்தனர். மணிமேகலையும் சுதமதியும் அத் தெருவினைக் கடந்து அடுத்த தெருவிற் புகுந்தனர்.

## ஓவியக் காட்சி

அத்தெருவில் இருந்த செங்கற் கட்டடங்கள் வானளாவி இருந்தன. அக்கட்டடங்கள் செங்கற் களால் ஆனவை. அவற்றின் மாடங்களில் தேவர் முதலிய எல்லாவகை உயிர்களும் சுதையினுல் அழகுறச் சமைக்கப்பட்டிருந்தன. அவை சோ ணுட்டுக் கைதேர்ந்த ஓவியரால் செய்யப்பட்டவை ஆதலின், பார்ப்பவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. பூம்புகார் நகரம் சிறந்த வாணிகத் தலமாதலின் நாடோறும் புதியவர் பலர் நகரத்திற்கு வந்தவண்ணம் இருந்தனர். அவர்கட்கு மேற் சொன்ன சுதைவுருவங்கள் வியப்பை அளித்தன. அதனுல் அவர்கள் அவற்றைப் பார்த்தவண்ணம் கூட்டங் கூட்டமாகத் தெருவில் நின்றிருந்தனர். மாதவியும் சுதமதியும் அச்சுதை உருவங்களையும் மக்களையும் பார்த்துக்கொண்டே அடுத்த தெரு விற்குச் சென்றனர்.

## புதல்வர் விழா

அத்தெருவில் அண்மையில் திருவிழா நடை பெற்றது. அத்தெருவில் தளர்நடைப் புதல்வர் பலர் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தனர். பொன்னு லாகிய கயிற்றிற் கோத்த நன்மணிக் கோவையாகிய, வெண்சிறு கடுகினை அப்பிய நெய்யணிந்த உச்சியில் மயிர்ப்புறத்திற் சுற்றப்பட்ட கொக்கினையுடைய மூன்று சரங்கள் அப்புதல்வர் சென்னியில் அழகு

பெறத்தொங்கின. திருமாலின் ஐம்படைகளைப்போலப் பொன்னாற் செய்த பொருள்கள் கயிற்றிற் கோத்து அப் புதல்வர் கழுத்தில் கட்டித் தொங்கவிடப்பெற்றிருந்தன. புதல்வரது வடிவு திருந்தாத மழலைச் சொல்லையுடைய சிவந்த வாயினின்றும் சிந்திய நீர் ஐம்படைத் தாலியை நனைத்தது. அழகிய ஆடை அவர்தம் இடையிற் சுற்றப்பட்டிருந்தது. வளையலையணிந்த மகளிர் சிலர் அப்புதல்வர்களைப் பொன் தேரில் கட்டப்பெற்ற யானைகள்மீது ஏற்றி, "ஆலின்கீழ் அமர்ந்த சிவபெருமானுக்கு மகனான முருகவேளின் விழாத் தொடங்குதலைக் காணுங்கள்," என்று கூறி மகிழ்ந்தனர். இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டு பலர் கூட்டமாக நின்றனர். மணிமேகலை யும் சுதமதியும் அக்காட்சியைக் கண்குளிரக் கண்டு சென்றனர்.

## மணிமேகலையைக் கண்ட மக்கள் கூற்று

மணிமேகலை மேற் சொல்லப்பட்ட பலவகைக் காட்சிகளைக் கண்டுகொண்டே வழிநடக்கையில், நகர மக்கள் அவளை நன்கறிந்தவராதலின், விராட நகரில் அருச்சுனனாகிய பேடியைக் காணச் சூழ்ந்த மக்களைப் போல வந்து மணிமேகலையைச் சுற்றிலும் சூழ்ந்து, "இப் பேரழகுடைய மகளைத் தவநெறிப் படுத்திய தாய் கொடியவள். இம் மணிமேகலை சிறந்த மலர் கொய்தற்குப் பூம்பொழிலில் நுழையின், அங்குள்ள நல்ல இளைய அன்னப்பறவைகள் நாணமல் இவள் நடைபோல் நடக்கவல்லனவோ? அங்குள்ள அழகிய மயில்கள் இந் நங்கையின் எதிரில் வந்து நின்று இவளது சாயலைக் கற்குமோ? அங் கிருக்கும் பசிய கிளிகள் இம் மங்கையின் மொழி

கட்குத் தோற்பன அல்லவோ ? இவையாவும் ஒப்பன அல்ல,'' என்று கூறி மனம் வருந்தி நின்றனர்.

### உவவனச் சிறப்பு

இங்ஙனம் மக்கள் வருந்திக் கூறுதலைக் கேட்டுக் கொண்டே மணிமேகலை உவவனம் நோக்கி நடந்தாள். உவவனம் குரவமும் மரவமும் குருந்தும் கொன்றையும் மஞ்சடியும் மகிழும் வெட்சியும் நாரத்தையும் சுரபுன்னையும் பரந்து மலர்கின்ற புன்னையும் பிடவமும் தளவமும் தாழையும் வெட்பாலையும் மூங்கிலும் பருத்த அடியினையுடைய அசோகமும் செருந்தியும் வேங்கையும் பெரிய சண்பகமும் நெருப்பைப்போற் சிவந்த பூக்களை யுடைய இலவமும் ஆகிய மலர்களைப் பரப்ப, கைத் தொழிலில் மேம்பட்ட வித்தகரால் இயற்றப்பட்ட சித்திரத் தொழில் அமைந்த துகில் போர்த்ததுபோலத் தோன்றியது.

சுதமதி அவ்வுவவனத்தைத் தொழுது மணிமேகலைக்குக் காட்டினாள். மணிமேகலை சிவந்த தளிர் போன்ற தன் சிவந்த அடிகளால் நிலத்தில் வடுவுண்டாகாமல் நடந்துசென்று உவவனத்துள் நுழைந்தாள்.

## (2) சாதுவன் தப்பிப் பிழைத்தல்

### சாதுவன் - ஆதிரை

சாதுவன் என்பவன் மணிமேகலை வாழ்ந்த காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த வணிகன். அவன் மனைவி ஆதிரை என்பவள். அவள் 'ஆதிரை' நட்சத்திரத்திற் பிறந்த காரணத்தால் அப்பெயர் பெற்றாள். அவள் கல்வி கேள்விகளிற்

சிறந்து விளங்கினுள். அவள் ஒழுக்கத்திற் சிறந்த உயர்குண நங்கை. அவளைக் காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் அனைவரும் பாராட்டினர்.

**சாதுவன் கூடா ஒழுக்கம்**

கணவன் கருத்துப்படி நடத்தலையே தன் கடமையாகக்கருதி வாழ்ந்துவந்த கற்பரசியாகிய ஆதிரையை விட்டுச் சாதுவன் பரத்தை ஒருத்திபால் அன்பு கொண்டு, அவளுடன் கூடி வாழலானுன்; கற்புடை மனைவியைப் பெற்ற கோவலன் அவளைத் துறந்து மாதவி என்ற நாடக மங்கையை அடைந்து தன் கைப்பொருளை இழந்தான் அல்லவா? அவனைப் போலவே சாதுவனும் பரத்தையின் வாழ்க்கையால் தன் முன்னேர் ஈட்டிவைத்திருந்த செல்வத்தை இழந்தான். செல்வனுக இருந்த கணவன் வறிஞனுன் என்றபொழுதும் கற்புடை மனைவி அவனை மரியாதைப்படுத்தலில் தவருள்; ஆயின், மனைவி அல்லாத பரத்தை, தன் கூட்டுறவு காரணமாக அவன் வறுமை அடைந்தான் என்பதை எண்ணுது, பொருளற்ற அவனை எள்ளி நகையாடுவாள்; அவன் மனம் புண்படுமாறு சுடுசொற் பகர்வாள்; அவன் தன் வீடு வராதபடி செய்துவிடுவாள். இந்நிலையே பொருளை இழந்த சாதுவனுக்கும் ஏற்பட்டது. அவனுடைய பரத்தை பொருள் உள்ள பிறரது சிறப்பினை அவனுக்குக் காட்டி, "நீ பொருள் இல்லாதவன்" என்று கூறி, தன் வீட்டிற்கு வரலாகாதெனத் திட்டமிட்டாள்.

## சாதுவன் நல்லறிவு பெறுதல்

பரத்தையால் விரட்டப்பட்ட சாதுவன் அப் பொழுது தன் நிலையைச் சிந்தித்துப் பார்க்கலானான்: “ நான் சிறந்த வணிகர் குடியிற் பிறந்தவன் ; வாணி கத்திற் பெரும் பொருள் ஈட்டிய எந்தை எனக்குப் பெருஞ் செல்வத்தை வைத்து இறந்தார் ; என் கருத் தறிந்து பணிவிடை செய்யும் ஒழுக்கத்திற் சிறந்த மனைவியை எனக்கு மணம் செய்வித்தார். நான் அறிவிழந்து பரத்தையின் பொய்யன்பை மெய்யன் பெனக் கருதி, உண்மையன்புடைய மனைவியைத் துறந்து, பரத்தையின் நலத்தை நாடினேன் ; அவளது தீய கூட்டுறவால் வட்டாட்டத்திலும் சூதாட்டத்திலும் பொருளை இழந்தேன் ; கண்டோர் நகைக்கத்தக்க வாறு நடந்து கெட்டேன் ; என்னையன்றி வேறு துணையற்ற கற்புடை மனைவியாகிய ஆதிரையின் இன்ப வாழ்க்கையைக் கெடுத்தேன் ; அவள் நாளும் என்னை நினைந்து கண்ணீர் வடித்தவண்ணம் இருப் பதைக் கண்டும் என் கல்மனம் இதுகாறும் இளகா திருந்தது. பரத்தை ‘ போ ’ எனச் சொன்ன பிறகே எனக்கு உண்மையறிவு தோன்றுகிறது. கள், சூது, பரத்தையர் உறவு, கொலை முதலியன ஒருவனை நாசமாக்குவன - நற்பண்புகளை உருக்குலைப்பன - மனிதனை விலங்காக்குவன என்று பெரியோர் கூறிய அறவுரையை மறந்த காரணத்தால் வாணிகத்தையும் இழந்தேன் ; முன்னோர் ஈட்டிவைத்த செல்வத்தையும் இழந்தேன் ; வணிகர்க்குரிய பரம்பரை மதிப்பையும் இழந்தேன். கூடாவொழுக்கம் என்னை நன்மக்க ளுடன் கூடாமற் செய்துவிட்டது......சரி. நான் இனி இந்நகரில் இருப்பதிற் பயனில்லை. கப்பல் ஏறி

அயல்நாடுகட்குச் சென்று சிறிதுகாலம் தங்கி வாணிகம் செய்து பொருளீட்டி இந்நகருக்கு வருத லாற்ருன் நான் இழந்த பெருமையை மீட்டும் எய்தக் கூடும். இனி நான் ஒழுக்கசீலனுய் வாழ்வேன். இஃது உறுதி.''

## கடற் பிரயாணம்

சங்க காலத்திற் காவிரிப்பூம்பட்டினம் சிறந்த துறைமுகப் பட்டினமாக இருந்தது. மேலை நாடுகளி லிருந்தும் கிழக்கு நாடுகளிலிருந்தும் கப்பல்கள் பண்டப் பொதிகளை ஏற்றிக்கொண்டுவந்து பூம்புகார்த் துறையில் இறக்குமதி செய்தன; சோழநாட்டுப் பண்டங்களை ஏற்றிக்கொண்டு தத்தம் நாடுகட்குச் சென்றன. காவிரிப்பூம்பட்டினத்து வணிகர் திரைகட லோடித் திரவியம் தேடினர். அவர்கள் தம் இனத் தவரைப் பேணிப் பாதுகாப்பதில் இணையற்றவர்; கூட்டங் கூட்டமாகக் கப்பல்களிற் சென்று அயல் நாடுகளில் தங்கி ஒற்றுமையுடன் வாணிகம் செய்த னர். அதனுல் எல்லா வணிகரும் செல்வவளத்துடன் வாழ்ந்தனர்.

சாதுவன் தன் எளிய நிலையைத் தன் உறவி னர்க்கு வெளிப்படுத்திஞன்; வாணிகம் செய்ய வேண்டும் என்ற தனது விருப்பத்தையும் தெரியப் படுத்திஞன். இனக்கட்டைப் போற்றும் இயல்புடைய வணிகர்கள் சாதுவனைத் தம்முடன் அழைத்துக் கொண்டு கப்பல் ஏறினர். அவர்கள் ஏறிய கப்பல் பூம்புகார்த் துறைமுகத்தைவிட்டுக் கிழக்கு நோக்கிப் புறப்பட்டது. கப்பலில் இருந்த சாதுவன் தான் பிறந்து வளர்ந்த தொன்னகரத்தைத் திரும்பிப் பார்த் தான்; மாசற்ற தன் மனைவியின் தனி வாழ்க்கையை

எண்ணி வருந்தினான்; அயல்நாட்டில் வாணிகம் செய்து பொருளீட்டி விரைவில் மீண்டு தன் வாழ்வரசியை மகிழ்விக்க வேண்டும் என்று எண்ணினான்.

## தப்பிப் பிழைத்தல்

சாதுவனை ஏற்றிச்சென்ற கப்பல் சிலநாட்கள் வரை பழுதின்றிக் கருங்கடலிற் சென்றது. ஒருநாள் சாதுவன் அதன் மேல்தட்டிலிருந்து கடற்காட்சியைக் கண்டுகொண்டிருந்தான். அப்பொழுது திடீரெனப் புயற்காற்று வீசத் தொடங்கியது. புயற்காற்றில் அகப்பட்ட துரும்புபோலக் கப்பல் தன் வசமிழந்து தவித்தது. அதன் உயிர்நாடியான பாய்மரம் ஒடிந்தது. 'இனிக் கப்பல் என்னாகுமோ?' என வணிகர் கவன்றனர். சாதுவன் ஏதோ யோசனை கைவரப் பெற்றவன்போல, ஒடிந்த பாய்மரத்துண்டைப் பற்றிக்கொண்டு திடீரெனக் கடலிற் பாய்ந்தான். அலைகள் அவனைத் தன் போக்கில் தள்ளிச்சென்றன. சாதுவன் பாய்மரத்தை விட்டிலன். அலைகள் அவனைத் தள்ளிச் சென்று ஒரு சிறிய தீவின் கரையிற் சேர்த்தன. இதற்கிடையில் அவன் ஏறிவந்த கப்பல் புயற்காற்றால் அலைப்புண்டு நள்ளிரவிற் பாறையில் மோதி உடைந்தது. பிரயாணிகள் பலர் கடலுக்கு இரையாயினர். பூம்புகார் வணிகர் சிலர் தப்பிப்பிழைத்து ஊர்போய்ச் சேர்ந்தனர்.

## கற்புக்கரசி - ஆதிரை

ஊரைச் சேர்ந்த வணிகர் சாதுவன் தப்பிப் பிழைத்ததை அறியாது, அவனும் கடலில் மாண்டான் எனக் கருதி, அத் துயரச் செய்தியை ஆதிரையிடம்

தெரிவித்துச் சென்றனர். அதுகேட்ட ஆதிரை அம்பு பட்ட மயில்போலத் துடிதுடித்து நிலத்தில் வீழ்ந்தாள்; பின்னர் எழுந்து பலவாறு புலம்பினாள்; " கணவன் இறந்தபிறகு யான் உயிர்வாழேன் " எனக் கூறித் தீயில் வீழ்ந்து இறக்கத் துணிந்தாள். அவள் கட்டளைப்படி சுடுகாட்டில் குழி தோண்டப் பட்டது. அக்குழியில் விறகுகள் இடப்பெற்றுத் தீ மூட்டப்பட்டது. சிறிது நேரத்தில் விறகுகள் நெருப்பாக மாறின. அவ்வட்டக் குழியிலிருந்து தீச்சுவாலை வெளிப்பட்ட வண்ணம் இருந்தது. நெருப்புச் சுவாலையுடன் கூடிய அவ் வட்டக்குழி, இதழ் விரிந்த செந்தாமரை மலரை ஒத்திருந்தது.

ஆதிரை தன் கணவனை நினைந்து அக்குழியிற் குதித்தாள். என்ன வியப்பு! அவள் உடுத்திய ஆடையில் தீப்பற்றவில்லை; பூசிய சாந்தமும் குழலிற் சூடிய மாலையும் தம் பழைய நிறத்துடன் இருந்தன. அவள் மணம் பொருந்திய தாமரை மலரில் ஒப்பின்றி வீற்றிருக்கும் திருமகள்போல இனிதே இருந்தாள்; " தீயும் என்னைத் தொடாத நிலையில் யான் கொடியவளோ ! " என்று ஏங்கினாள்; அப்பொழுது, " ஆதிரையே, உனது கணவன் கடல் அலைகளால் உந்தப்பட்டு ஒரு தீவை அடைந்துள்ளான்; சந்திர தத்தன் என்னும் வணிகனது கப்பலில் விரைவில் வருவான். ஆதலால் நினது துன்பத்தை ஒழிப்பாயாக," என்று அசரீரி சொல்லக் கேட்டாள்; அசரீரிக்கு வணக்கம் செலுத்தித் தீயிலிருந்து எழுந்து தன்னகம் புகுந்தாள்; தன் ஆருயிர்க் கணவன் வரும் நன்னாளை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

## (3) நாகர் தீவில் சாதுவன்

**சாதுவனும் நாகரும்**

சாதுவன் அலைகளால் ஒதுக்கப்பட்டுக் கரை சேர்ந்த தீவு மலைப் பாறைகளைக் கொண்டது. அத் தீவின் கடற்கரையில் மிகவுயர்ந்த மலையின்கண் இருந்த மர நிழலில் சாதுவன் தன்னை மறந்து உறங்கலானான். அத்தீவில் 'நாகர்' என்னும் அநாகரிக மக்கள் வாழ்ந்துவந்தனர். அவர்கள் ஆடையின்றி இயங்கினவராதலின் 'நக்க சாரணர்' எனப்பட்டனர். அவர்கள் மனிதரை அடித்துத் தின்னும் இயல்புடையவர்கள். வழியில் மரக்கலம் கவிழ்ந்து உயிர் பிழைத்துத் தம் தீவை அடையும் மக்களைக் கொன்று உண்பதே அவர்கள் இயல்பு. கப்பற் பிரயாணிகளுடைய பொருளைக் கவர்ந்துகொள்ளலும் அவர் தொழிலாக இருந்தது.

அக்கொடியோருள் இருவர் மரத்தடியில் உறங்கிக் கொண்டிருந்த சாதுவனைக் கண்டனர்; "இவன் கப்பல் உடைந்து களைத்துப் போய் வந்தவனைப் போலக் காணப்படுகிறான். இவன் தனியனாய் இங்கு வந்துளன் போலும்! புலால் பொதிந்த இவனது உடம்பு நமக்கு நல்லுணவாகும்," என்று கூறிக் கொண்டே அவனை எழுப்பினர்.

சாதுவன் பல மொழிகளை நன்கறிந்தவன். அவன் நாகர் மொழியும் பேசத் தெரிந்தவன் ஆதலின், அந்நாகருடன் அவர் மொழியிலேயே தன் வரலாற்றை எடுத்துரைத்தான். நாகர் வியப்புற்று அவனைத் தீண்டாது நின்று, "ஐயனே, இத்தீவில் எங்கள் ஆசிரியன் இருக்கின்றான். நீ அவனிடம் வருக," என்று அழைத்துச் சென்றனர்.

## குருமகன் தரிசனம்

அவர்கள் சென்ற இடத்தில் ஒரு குடிசை இருந்தது. அதில் கள்ளைக் காய்ச்சுகின்ற பானை ஒரு பக்கம் இருந்தது; மிகுந்த புலால் நாற்றமுடைய தசை மற்றொரு பக்கம் இருந்தது. காய்ந்த எலும்புகள் தரை நிறையக் கிடந்தன. அவ்வெலும்புகள்மீது கரடி தன் பெட்டையோடு இருந்தாற் போல நாகர் குரு தன் மனைவியோடு வீற்றிருந்தான். சாதுவனை அழைத்துச் சென்ற நாகர் அக் குருமகனைப் பணிந்து, சாதுவனை அவன்முன் நிறுத்தினர். சாதுவன் அக் குரு மகனைக் கண்டதும் வியப்பும் வெறுப்பும் மாறி மாறி உற்றான்.

## சாதுவன்–குருமகன் உரையாடல்

**குருமகன்** :—நீ இங்கு வந்த காரணம் யாது?

**சாதுவன்** :—நான் கடல் வாணிகத்திற்காகக் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து வந்தேன். நான் வந்த கப்பல் வழியில் புயற் காற்றில் அகப்பட்டது; அதன் பாய்மரம் உடைந்தது. நான் அதனைப் பற்றிக் கொண்டு இங்கு வந்தேன்.

**குருமகன்** :—(தன் ஆட்களை நோக்கி) இவன் கடலில் துன்புற்றுக் களைத்து வந்தவன் ஆதலின், இவனுக்குப் பணிபுரிய இளநங்கை ஒருத்தியையும் வேண்டுமளவு கள்ளையும் புலாலையும் கொடுங்கள்.

**சாதுவன்** : — (தன் காதுகளைப் பொத்திக் கொண்டு) கொடுஞ் சொற்கள் என் காதுகளிற் படுகின்றன. இவை மூன்றும் எனக்கு வேண்டா, வேண்டா.

**குருமகன்** :—(வியப்புற்று) மாதரும் உணவும் இல்லை எனின், மக்கள் உலகில் அடையும் பயன்

வேறு உண்டோ? உண்டெனின், காட்டு; காண்போம்.

**சாதுவன் :—** கள், உண்டாரது அறிவை மயக்கும் இயல்புடையது. உயிர்க் கொலை ஐம்பெரும் பாவங்களுள் ஒன்று. ஆதலின் கலக்கமற்ற அறிவினையுடைய பெரியோர் அவ்விரண்டையும் விலக்கிவிட்டனர். உலகிற் பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் உறங்குவதும் உறங்கி விழிப்பதும் போல்வதாக உள்ளமையின், நல்ல அறங்களைச் செய்வோர் இன்பம் அடைதற்குரிய மேல் உலகங்களை அடைதலும், தீவினை இயற்றுபவர் நரகத்தை அடைதலும் உண்மை என்று உணர்தலால் அறிஞர் அவற்றை அகற்றினர்.

**குருமகன் :—**(நகைத்து) உடம்பை விட்டு ஓடும் உயிர் உருக்கொண்டு ஓரிடம் புகும் என்றனை. அஃது எவ்வாறு சென்று புகும்? அத்திறத்தினை விளங்க வுரை.

**சாதுவன் : —** உயிர் தன்னிடம் உறையும் பொழுது உடல் தன்னிடம் உறுகின்றதனை உணரும். ஆயின் அவ்வுடலே, உயிர் பிரிந்தால், வெட்டித் தீயில் இட்டாலும் அறியாது. அதனால் உடம்பிலிருந்து பிரிகின்ற ஒன்று (உயிர்) உண்டு என்பதை அறிக. அவ்வுயிர்க்குப் புகும் இடம் ஒன்று உண்டு என்பதை எல்லோரும் அறிவர். உடம்பு இங்கு இருக்கையில், உயிர் பல காவதங்களைக் கடந்து போதலைக் கனவிற் காணலாம். அதுபோலவே உயிர் தன் வினைப்பயனை நுகர்தற்குரிய உடலின்கண் புகும் என்பதை அறிக.

**குருமகன் :—**(சாதுவன் கூறிய விளக்கத்தை உளங்கொண்டு மகிழ்ந்து அவனடி பணிந்தான்.) கள்ளையும் புலாலையும் விட்டு யான் உயிர் வாழ வழி

அறியேன். நான் சாகும்வரை நடக்கத் தகும் அற வழியைக் கூறுக.

**சாதுவன்** :—ஐயனே, உனக்கு இயலும் வழியால் அறத்தினைக் கூறுவேன். கப்பல் உடைந்து இங்கு வந்து சேரும் மக்களைக் கொல்லாமல் அவர்களைப் பாதுகாப்பாயாக. தாமாக இறக்கும் விலங்குகளைத் தவிர, வேறு எந்த உயிரையும் கொல்லற்க.

**குருமகன்** : — (மகிழ்ச்சியுடன்) இவ்விரண்டு அறங்களும் எம்மால் செய்யத் தகுவனவேயாகும். நாங்கள் இதுகாறும் இங்கு வந்த மனிதரைக் கொன்று உண்டுவந்தோம்; அவர்களுடைய பெருஞ் செல்வத்தைத் திரட்டி வைத்துள்ளோம். எங்கட்கு நல்லறம் உரைத்தாய். ஆதலால் நீ அற்வறை எடுத்துச் செல்.

**சாதுவன் வீடு திரும்புதல்**

சாதுவன் குருமகன் தந்த பெருஞ் செல்வத்தை எடுத்துக்கொண்டு, அத்தீவிற்கு வந்த சந்திரதத்தன் என்ற வணிகனது கப்பலில் ஏறிக் காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்தான். அவனைக் கண்ட கற்பரசியாகிய ஆதிரையின் முகம் அன்றலர்ந்த செந்தாமரையினை வென்றது.

## (4) ககந்தன் ஆட்சியில் இரண்டு நிகழ்ச்சிகள்

### I

**காந்தமன் அரசு துறத்தல்**

பல நூற்றுண்டுகட்கு முன் காவிரிப்பூம்பட்டினத்தில் **காந்தமன்** என்ற சோழ மன்னன் அரசு செலுத்திவந்தான். அப்பொழுது அரச மரபினரை வேரறுக்கும் முயற்சியில் ஈடுபட்ட பரசுராமன்

என்னும் அந்தண வீரன் தென்னாடு நோக்கி வந்தான். இவன் வருகையை உணர்ந்த காந்தமன் காட்டிற்குச் சென்று தவம் செய்யத் துணிந்தான்; பரசுராமனால் தாக்கப்படாத நிலையில் தன் காமக் கிழத்தியின் மகனான ககந்தன் என்பவனைச் சோழ மன்னனாக்க விழைந்தான். ககந்தன் சிறந்த போர் வீரன்; நன்னெறியாளன். காந்தமன் ககந்தனை அழைத்து, "மகனே, நீ அரச மரபினன் அல்லை ஆதலின் பரசுராமன் நின்னைத் தாக்கான். அகத்தியர் அருள்மொழியால் யான் மீண்டும் இந் நகரை அடையும்வரை இந் நகரையும் நாட்டையும் காப்பாயாக. ககந்தனாகிய நீ ஆளப் போவதால் இந்நகரம் **காகந்தி** எனப் பெயர் பெறுவதாகுக," என்று கூறி, அவனை அரசனாக்கித் தான் வேற்றுருக்கொண்டு தவம்புரியக் காடு சென்றான்.

## ககந்தன் மகனும் மருதியும்

ககந்தன் குடிகள் பாராட்டும் வகையில் பல நன்மைகள் செய்தான். அவன் அரசனது காமக்கிழத்தியின் மகன் ஆயினும் நற்குணங்கட்கு இருப்பிடமாக இலங்கினான்; கல்வி, கேள்விகளிற் சிறந்து விளங்கினான்; அமைச்சர் முதலிய அரசியல் யோசனையாளர் சொற்படி நாட்டை நன்னிலையில் அரசாண்டுவந்தான். ஒழுக்கத்திற் சிறந்த அம் மன்னனுக்கு ஒழுக்கம் கெட்ட மைந்தர் இருவர் இருந்தனர். அவருள் இளையவன் ஒரு நாள் காவிரி நீர்த்துறையின் அருகில் நின்றிருந்தான். அப்பொழுது **மருதி** என்னும் மங்கை ஒருத்தி காவிரியில் நீராடித் தனியே வந்துகொண்டிருந்தாள். அவள் தனித்து வருதலைக் கண்ட அரச குமரன் அவளது பேரழகில் ஈடுபட்டு,

தான் அரசகுமரன் என்னும் மமதையுடன் அவளை உற்று நோக்கினான்.

## சதுக்கப்பூதமும் மருதியும்

அந் நேரிழையாள் மனக்கலக்கமுற்று உடல் நடுங்கி, " வேண்டுங்கால் மழையினைப் பெய்விக்கும் கற்புடை மகளிர் பிறர் உள்ளம் புகார். யானோ இந்த அயலான் உள்ளத்திற் புகுந்தேன்; ஆதலின் என் கணவனுகிய அந்தணனது முத்தீயைக் காக்கும் தகுதி எனக்கில்லை," என்று கூறி வருந்தியவளாய்த் தன் வீடு செல்லாது, பூத சதுக்கத்தை அடைந்தாள்; அங்குக் கோயில்கொண்டுள்ள பூதத்தைப் பணிந்து, " நான் கணவனைப் பிழைத்த குற்றமுடையேன் அல்லேன்; அங்ஙனம் இருந்தும் அயலவன் நெஞ்சில் எளிதிற் புகுந்தேன். நான் மழையைத் தரும் கற்புடைய மகளிர்க்குரிய இல்லறத்திற் பொருந்தியவள். நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. எனினும், பிறர் நெஞ்சு புகுந்த என்னைப் புடைத்துண்பாய்," என்று கூறிப் பலவாறு புலம்பினள்.

சதுக்கப் பூதம் மருதிமுன் தோன்றி, " மடக்கொடியே, ' பிற தெய்வத்தை வணங்காது தன் தெய்வமாகிய கணவனைத் தொழுது எழுகின்ற கற்புடை நங்கை பெய் என்று சொல்லப் பெருமழை பெய்யும் ' என வுரைத்த தெய்வப் புலவராகிய திருவள்ளுவனரது பொருள் மொழியைத் தெளியாதவளாய்ப் பொருளொடு புணராப் பொய் மொழிகளையும் நகை மொழிகளையும் பிறரிடம் கேட்டு விழாக் காண்பதை விரும்பி வேறு கடவுளை வணங்கும் கடப்பாடு உடையை. ஆதலால் நீ ஏவினல் மழை பெய்யாது; நிறையுடைய மகளிரைப் போலப் பிறருடைய உள்ளத்

தைச் சுடுகின்ற தன்மை உடையவளும் அல்லே. நீ முற்கூறிய செயல்களே நீக்குவை ஆயின், நீ ‘பெய்’ யெனப் பெய்யும் பெருமழை. எனினும், நீ ஒழுக்கம் உடையவள் ஆதலின், ஒழுக்கமற்ற பெண்டிரைப் பிணிக்கும் எனது பாசம் நின்னேப் பிணியாது. அரசன் உன் உள்ளத்தை வருத்தியவனே ஏழு நாட்களில் தண்டிப்பான்; அவன் தண்டியாவிடில், ஏழு நாட்களுக்குப் பிறகு யான் அவனேத் தண்டிப்பேன். ககந்த மன்னவன் இற்றைக்கு ஏழாம் நாள் இத் தவற்றைக் கேள்வியுற்று ஒறுப்பான்,” என்று கூறியது.

## ககந்தன் நீதி வழங்கல்

பூதம் கூறியவாறே, ககந்தன் தன் இளைய மைந்தனது தவருன செயலேக் கேள்வியுற்ருன்; கடுஞ் சினம் கொண்டான்; அவனே வரவழைத்துத் தன் வாளால் அவனே வெட்டி வீழ்த்திஞன். குடிகள் அவனே உளமாரப் பாராட்டினர்.

## II

## விசாகைமீது ஊர் அலர்

காவிரிப்பூம்பட்டினத்தில் ககந்தன் ஆண்டுவருங் காலத்தில் **தருமதத்தன்** என்ற வணிக இளைஞன் ஒருவன் அம் மாநகரத்திலேயே வாழ்ந்துவந்தான். அவன் அழகிற் சிறந்தவன்; குணங்களால் உயர்ந்தவன்; வாணிகத்துறையிலும் வல்லவன். அவன் மாமன் மகள் விசாகை என்பவள் பேரழகி; சிறந்த கல்வியறிவுடையவள்; குணங்களில் மிக்காள். இருவரும் கண்கவர் ஓவியம் போன்றவர். ஒத்த குணமும் ஒத்த கல்வியும் ஒத்த நலனும் உறவின் முறையும் உடைய

அவர்கள் இருவரும் அடிக்கடி சந்தித்துப் பழகினர். அது கண்ட ஊரார் சிலர் அலர் தூற்றினர்.

## கற்புடை விசாகை

அது கேட்ட விசாகை உள்ளம் துடித்தாள்; உலக அறவியின்கண் சென்று அங்கிருந்த கந்திற் பாவையைத் தரிசித்து, "தூணின்கண் எழுதப்பட்ட தெய்வப் பாவையே, ஊரவர் என்மீது கூறும் பெரும் பழியை நீக்குவாயாக," என்று வேண்டினாள். உடனே நாவுடைய அப்பாவை, "மாநகரத்து மக்களே, இந்த விசாகை மழையைத் தரும் கற்புடையவள் என்பதை அறியுங்கள்," எனக் கூறியது. விசாகை அத்துடன் மன அமைதி பெறவில்லை; "இப்பிறப்பில் நான் தருமதத்தனை மணவேன்; கன்னியாக இருந்தே என் கற்புடைமையை ஊரவர்க்கு அறிவிப்பேன்," என்று உறுதிகொண்டு, தனது முடிவுக்கு வருந்திய தன் தாயைத் தேற்றிக் கன்னி மாடம் புகுந்து உறைவாளானாள்.

## தருமதத்தனது உள்ளத் துறவு

தருமதத்தனுடைய பெற்றோர் தம் மைந்தன் குற்ற மற்றவன் என்பதை ஊரவர்க்கு அறிவித்த கந்திற் பாவையைப் பலபட ஏத்தி, மதுரை சென்று வாழத் துணிந்து, தருமதத்தனையும் உடன் அழைத்துச் சென்றனர். தருமதத்தன், "நான் வேறு மகளிரை மணவேன். இப் பிறப்புத் திருமணமின்றியே ஒழிக," என்று பிரமசரிய விரதம் கொண்டான்.

## தருமதத்தன் பூம்புகார் அடைதல்

ஆண்டுகள் பல கடந்தன. தருமதத்தன் அறுபது வயதினனுயினன். அவன் வாணிகத்திற் பெரும் பொருள் திரட்டியிருந்தான்; அரசனுல் எட்டி என்ற பட்டமும் அதற்குரிய பொற்பூவும் பெற்றுச் சிறப் புற்று விளங்கினுன். வயது முதிர்ந்தமையால் தன் தொன்னகர் மீளலே தக்கதென்றெண்ணிக் காவிரிப் பூம்பட்டினம் மீண்டான்.

## விசாகையின் கனிவுரை

தன் உள்ளங் கவர்ந்த தருமதத்தன் மீண்டு வந் ததை அறிந்த விசாகை அவனைக் கண்டு, "அன்பரே, நாம் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டுகொள்ள இயலா முதுமை அடைந்துவிட்டோம். நம்மை மயக் கிய இளமையும் அழகும் யாண்டு ஒளித்தன? உமக்கு வயது அறுபது ஆயிற்று. எனது கூந்தலும் நரைத்து விட்டது. நான் இப் பிறப்பில் உமக்கு மனைவியாகும் பேறு பெறவில்லை; மறு பிறப்பில் உமது குற்றேவல் கேட்கப்பெறுவேன். இளமையும் நிலை பெருது; உடம்பும் நிலை பெருது; வளமுடைய செல்வமும் நிலை பெருது; உம்பர் உலகத்தைப் புதல்வராலும் பெற இயலாது. இவை அனைத்தினும் மேம்பட்ட அறமே உயிர்க்குச் சிறந்த துணையாகும். ஆதலின் நுமது பொருளை வறியார்க்கு வழங்கி வாழ்க," என்று கூறினுள். தருமதத்தன் தன்பெருஞ்செல்வத்தை விசா கையிடம் காட்டி, அவளுடன் சேர்ந்து பல நல்லறங் களைச் செய்தான்.

**சுகந்தன் நீதி வழங்கல்**

இத்தகைய கற்பரசியாகிய விசாகை உலக அறவியிற் சென்று கந்திற்பாவையால் தான் குற்றமற்றவள் என்பதை ஊரவர்க்கு அறிவித்த பிறகு வீடு நோக்கி வந்துகொண்டிருந்தாள். அப்பொழுது சுகந்தனது மூத்த மைந்தன் அவளை விரும்பித் தன் தலைமாலையை எடுத்து விசாகைக்குச் சூட்ட எண்ணினன்; எண்ணி, மாலையை எடுத்தற்குக் கையைத் தன் தலையில் ஏற்றினன். அக்கை அவன் குடுமியிலிருந்து எக்காரணத்தாலோ நீங்கவில்லை. இதனைக் கேட்டறிந்த சுகந்தன் கடிய சினம்கொண்டு, தன் ஒரு மகன் என்பதையும் நோக்காது, அவனைத் தன் வாளால் வெட்டி வீழ்த்தினன். மாநகரத்தார் அவனது மாசற்ற நீதி முறையைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

## (5) வளவன் வழங்கிய நீதி

**மணிமேகலையும் உதயகுமரனும்**

சோழர்க்கு 'வளவர்' என்ற பெயர் வழக்கும் உண்டு. மணிமேகலை வாழ்ந்த காலத்தில் நெடுமுடிக் **கிள்ளி** என்பவன் சோழப்பெருநாட்டை ஆண்டு வந்தான். அவன் செங்கோல் முறையினின்றும் வழுவாத வேந்தன். அவனுக்கு **உதயகுமரன்** என்ற மைந்தன் ஒருவன் இருந்தான். ஊழ்வினை வசத்தால் அவன் மாதவி மகளான மணிமேகலையை விரும்பினன். மாதவியும் மணிமேகலையும் தவக்கோலம் கொண்டதைச் சிறிதும் விரும்பாத மாதவியின் தாயான சித்திராபதி என்பவள் மணிமேகலையை அடையுமாறு உதயகுமரனைத் தூண்டினள். உதய

குமரன் அரச குமரன் என்பதை அறிந்தும் துறவில் பற்றுக்கொண்ட மணிமேகலை தன் மனவுறுதியில் மாறவில்லை. அவன் பல முறை அவளிடம் வந்து தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினான். உள்ள வுறுதியுடைய மணிமேகலை அவனுக்கு யாக்கை நிலையாமையையும் இளமை நிலையாமையையும் நன் முறையில் எடுத்துக்கூறி அகன்றாள்.

## வேற்றுருவில் மணிமேகலை

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த உலக அறவி என்ற பொதுவிடத்தில் இருந்துகொண்டு மணி மேகலை உணவு வற்றாத பிச்சைப்பாத்திரம் ஒன்றின் உதவியால் உயிர்களை உண்பித்துவந்தாள். அங்குக் காயசண்டிகை என்ற வித்தியாதரமகள் ஒருத்தி இருந் தாள். அவள் உடல் நலம் பெற்றபிறகு தன் ஊருக் குச் சென்றாள். உதயகுமரனது தொல்லைக்கு அஞ் சிய மணிமேகலை, வேற்றுருக் கொள்ளும் மந்திர வன்மையால், ஊரை விட்டுச் சென்ற காயசண்டிகை வடிவத்தைக் கொண்டாள். அவள் அங்ஙனம் உரு மாறியும் உதயகுமரன் அவளை விட்டிலன். ஒரு நாள் அவன் வந்து அவளிடம் நகைமுகத்துடன் தன் விருப் பத்தை எடுத்துரைத்தான். அவ்வமயம் காயசண்டி கையைத் தேடிவந்த அவள் கணவனான காஞ்சனன், மணிமேகலையைத் தன் மனைவியென மயங்கி, அவளை நெருங்கி, " உன் கையில் ஏந்திய பாத்திரம் ஒன்றே ஆயினும், உண்போர் பலராக வுளர். உன்னை வருத் திய யானைத் தீயாகிய நோயை ஒழித்தற்குத் தேவர் கள் இதனை உனக்கு அளித்தார்களோ?" என்று ஆவ லுடன் கேட்டான். காயசண்டிகையின் உருவில் இருந்த மணிமேகலை அவனிடம் முகம் கொடுத்துப்

பேசாமல், உதயகுமரனை நெருங்கி, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை என்பவற்றை அவனுக்கு விளங்க உரைத்துக்கொண்டிருந்தாள். உண்மை உணராத காஞ்சனன், தன் மனைவி தன்னை மதியாது அரசகுமரனிடம் அன்பு கொண்டிருப்பதாக எண்ணி, "அரசகுமரன் இரவில் இங்கு வருவான் போலும்! இருந்து காண்போம்," எனக் கருதிப் புற்றினுள் அடங்கும் அரவைப் போல அவ்வுலகவறவியினுள்ளே புகுந்து ஒளிந்திருந்தான். உதயகுமரன், "இவளை அறிந்தவன் போலப் பழமை பாராட்டிப் பேசிய அயலான் யாவன்? அவன் இங்கேயே தங்கியிருத்தலால் நாம் இரவில் வந்து இவள் செய்தியை அறியவேண்டும்," என்று உறுதிகொண்டு அகன்றான்.

## உதயகுமரன் கொல்லப்படல்

இவ்வாறு இருவரும் சென்ற பிறகு மணிமேகலை காயசண்டிகை வடிவத்துடனே சம்பாபதி கோவிலை அடைந்து தங்கினாள். நள்ளிரவில் உதயகுமரன் உலகவறவியை அடைந்து, நச்சரவு கிடந்த புற்றினுள்ளே புகுவான்போல அதனுட் புகுந்தான். அவன் வரவை எதிர்பார்த்திருந்த காஞ்சனன் அவனைத் தன் வாளால் துணித்து வீழ்த்திவிட்டுக் காயசண்டிகையைத் தூக்கிச்செல்ல நினைந்து, மணிமேகலை அருகிற் சென்றான். அப்பொழுது கந்திற்பாவை உண்மை உரைத்து, அவனைத் தன்னூருக்கு ஏகுமாறு செய்தது.

## மன்னவன் வழங்கிய நீதி

சக்கரவாளக் கோட்டத்தில் இருந்த முனிவர்கள் நடந்த உண்மைகளை மணிமேகலை வாயிலாகக் கேட்

டறிந்து நெடுமுடிக்கிள்ளியிடம் சென்று விளங்க வுரைத்தனர். அது கேட்ட மன்னன் தன் ஒரு மைந்தன் இறந்தமைக்குச் சிறிதும் வருந்திலன்; தன் தானைத் தலைவனை நோக்கி, "உதயகுமரனுக்கு யான் செய்யவேண்டிய தண்டனையை விஞ்சையன் செய்து விட்டான்.

"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனில் இன்றால்"

பசுக் கன்றைக் கொன்ற குற்றத்திற்காகத் தன் மகனைத் தேர்க்காலிற் கிடத்திக் கொன்ற மன்னவன் வழியில் இத்தீவினையாளன் பிறந்தான் என்னும் சொல் பிற அரசர்கட்கு எட்டு முன்னரே அவன் உடலை எரித்து விடுக," எனக் கட்டளையிட்டான். அரசனது நேர்மையைக் கண்ட முனிவர்கள் அவனை வாழ்த்தி அகன்றனர்.

**மணிமேகலை**

இத்தகைய நீதி கற்பிக்கும் காட்சிகள் பலவற்றை **மணிமேகலை** என்னும் காவியத்திற் காணலாம். இது பௌத்த சமயச் சார்புடைய நூல்; சிறந்த காவியம். இதனைப் படித்துப் பயன்பெறுதல் உங்கள் கடமையாகும்.

---

ஆர். கே.
மா. ரா. அரசு
சென்னை-600001



# SANGANOOL KATCHIGAL

BY

Dr. M. RAJAMANICKKAM,
M.A., L.T., M.O.L. (Ph. D.)
*Vivekananda College, Madras.*

RAMNATH PUBLISHING HOUSE
TEPPAKULAM : : TIRUCHIRAPALLI

*Copyright*] 1952 [*Price As.* 12